Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விரைவாகவும், துல்லியமாகவும் உங்கள்
இல்லங்களிலிருந்து உங்கள் உறவுகளுடன்
INTERNET
மூலமாக உறவாட,
உள்ளூர், வெளியூர்
துரித தொலைத் தொடர்புகட்கு
'திருமுருகன் கொம் நெற்'
இல. 46, ஆடியபாதம் வீதி,
(ப.நோ.கூ.ச. முன்பாக)
திருநெல்வேலி.
T.P.021-222-7310
(சி-1771)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 கார்த்திகை 25 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஷவ்வால் 16 (11.12.2003) வியாழக்கிழமை இதழ்:72

# இராணுவத்தின் செயலைக் கண்டித்து இன்று குடாநாட்டில் பூரண ஹர்த்தால்!

## பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். பஸ்நிலையப் பகுதியில் நேற்றுமுன்தினம் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைக் கண்டித்தும், சமாதான முயற்சிகளை இராணுவத்தினர் குழப்புவதை நிறுத்தவேண்டும் எனக்கோரியும், இன்று யாழ். மாவட்டத்தில் பூரணஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதற்கான அழைப்பினை யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்துள்ளது.

அரச அலுவலகங்கள், கல்வி நிலையங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், தனியார் நிறுவனங்கள் உட்பட அனைத்து தரப்பு செயற்பாடுகளையும் நிறுத்தி, ஹர்த்தாலை வெற்றி பெறச் செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

எனினும், தற்போது இடம்பெற்று வரும் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையைக் கருத்தில் கொண்டு அதற்கு இடையூறு ஏற்படாத வகையில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பொதுப் போக்குவரத்துக்களை மினிபஸ் உரிமையாளர்களும், வடபிராந்திய போக்குவரத்துச் சபையினரும் மேற்கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

இயல்பு நிலை தோன்றுவதற்கு இராணுவத்தினர் ஒருபோதும் வழி விடமாட்டார்கள் என்பதையும் அதனைத் தமிழ் மக்கள் அனுமதிக்கப்போவதில்லை என்பதையும் சர்வதேச சமூகத்திற்கும், அரசிற்கும் உணர்த்தும் வகையில் இன்றைய ஹர்த்தால் சிறப்பாக அமையவேண்டும் எனவும், வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்துள்ள வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ப)

## ஜனாதிபதி - பிரதமர் இடையிலான

# அரசியல் நெருக்கடி குறித்த நேற்றைய பேச்சும் தோல்வி!

(கொழும்பு)

**தற்போதைய அரசியல் நெருக்கடி குறித்து, ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையே நேற்று நடைபெற்ற நான்காம் கட்டப்பேச்சுவார்த்தை தீர்வேதும் எட்டப்படாத நிலையில் முடிவடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.**



நேற்றுக்காலை 11.30 மணி முதல் சுமார் மூன்று மணிநேரம் ஜனாதிபதி மாளிகையில் இந்தச்சந்திப்பு இடம் பெற்றது.

இந்தச்சந்திப்பில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்தல், அதற்கான அதிகாரங்களை பயன்படுத்துதல் முதலான விடயங்கள் பேசப்பட்டன.

விடுதலைப் புலிகளுடன் பிரதமரின் முயற்சியில் இடம்பெற்ற சமாதானப்பேச்சுவார்த்தைகளில் பேசப்பட்ட விடயங்கள் மற்றும் இரு தரப்பால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்கள் என்பன பற்றிய விடயங்களைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியிடம் நேற்றைய சந்திப்பின் போது கையளித்துள்ளார்.

இதற்கு முன்னர் நடைபெற்ற சந்திப்பின்போது ஜனாதிபதி மேற்படி விபரங்களைச் சமர்ப்பிக்குமாறு கோரியிருந்தார். (10 ஆம் பக்கம் பார்க்க)



### வீண்ணாணம் விநாசியர்



தீர்வு மட்டுமில்லை சந்திப்பும் இப்ப இழுபறிக்குள்ளாயிட்டு!

## யாழ்.பஸ்நிலையச் சம்பவம்

# இராணுவச் சிப்பாய்கள் மூவருக்கு 23 ஆம் திகதிவரை விளக்கமறியல்!

யாழ்.பஸ்தரிப்பு நிலையப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர் எனச் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட மூன்று இராணுவச் சிப்பாய்களையும், எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு - யாழ்.மாவட்ட மேலதிக நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இந்த இராணுவச் சிப்பாய்களின் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இருவர் காயமடைந்துள்ளமை மற்றும் மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியமை போன்ற குற்றச்சாட்டுக் கள் தெரிவிக்கப்படுகின்றன.

யாழ்.பொலிஸ் நிலைய அத்தியட்சகர் ஹெட்டி ஆராட்சி இந்த இராணுவச் சிப்பாய்களின் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தவறுதலாக இடம்பெற்றுள்ளதாகத் தெரிவித்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி -பிரதமர் செயலாளர்கள் இன்று சந்தித்துப் பேச்சுநடத்துவர்!

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவும் நேற்றுக்கூடி ஆராய்ந்த விடயங்கள் குறித்து அவர்களது செயலாளர்கள் இன்று ஆராயவுள்ளார்கள்.

நேற்று ஜனாதிபதி மாளிகையில் இரண்டு மணித்தியாலங்களுக்கு மேலாக இடம்பெற்ற சந்திப்பில் - ஜனாதிபதியும், பிரதமரும் பேசிய விடயங்கள் குறித்து இவர்கள் விரிவாக (10 ஆம் பக்கம் பார்க்க)

# படையினர் - புலிகள் அம்பாறையில் சந்திப்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்றிலுள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் எதிர்வரும் 15 ஆம் திகதி காலை பத்துமணிக்கு புலிகளுக்கும் - படையினருக்கும் இடையில் சந்திப்பொன்று நடைபெறவுள்ளது.

அம்பாறை மாவட்ட கண்காணிப்புக்குழுவின் தலைவர் தலைமையில் நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பில் விடுதலைப்புலிகளின் மட்டு அம்பாறை மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் பாவா, துணை அரசியற்துறைப்பொறுப்பாளர் குயிலின்பன் ஆகியோரும் படைத்தரப்பில் அம்பாறை மாவட்ட விசேட அதிரடிப் படையின் கட்டளைத்தளபதி உபுல் செனவிரத்ன, மற்றும் மாவட்டத்திலுள்ள விசேட அதிரடிப்படை முகாம்களின் பொறுப்பதிகாரிகள், பொலிஸ் (10 ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமைகள் தினமான நேற்று

# காணாமல் போனோரின் பாதுகாவலர் சங்கம் மனிதவுரிமைகள் ஆணைக்குழு முன் மறியல்!

காணாமற் போனோரின் பெற்றோர் பாதுகாவலர் சங்கத்தினர் நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின யாழ் செயலகத்துக்கு முன்னால் மறியற் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். தமது பிள்ளைகள் மற்றும் கணவன்மாரின் நிலை என்ன என்பது குறித்து தமக்குத் தகவல் பெற்றுத்தர வேண்டும் என்று கோரியே அவர்கள் மனித உரிமைகள் தினமான நேற்று மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

காலை 8.00 மணிக்கு முன்னதாக மனித உரிமைகள் அலுவலகத்தில் கூடிய இவர்கள் தமிழிலும் சிங்களத்திலும் எழதப்பட்ட சுலோக அட்டைகளை தாங்கியவாறு காணப்பட்டனர். (10 ஆம் பக்கம் பார்க்க)









மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்துக்கு முன்பாக நேற்று மறியற்போராட்டத்தில் ஈடுபட்டோரில் ஒரு பகுதியினரை படத்தில் காணலாம்.

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 0114512666 0112360290 0112360291
email . jaffna @ expoavi . com.
(சி -1845)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில்
உங்கள் தோழன்...

# யாழ். நகரில் நடைபெற்ற சம்பவம் சமாதான முயற்சியை குழப்பும் செயல்

## யாழ்.மாவட்ட சிற்றூர்தி சங்கம் கண்டனம்

யாழ்.நகரப்பகுதியில் நேற்று நடைபெற்ற படையினர் மேற்கொண்ட தாக்குதல் சம்பவம், அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்றுவரும் சமாதான முயற்சியைக் குழப்பும் செயலாகும்.

இவ்வாறு, யாழ்.மாவட்ட சிற்றூர்தி சேவைச் சங்கங்களின் இணையம் குற்றம்சாட்டியுள்ளது.

பஸ்நிலையப்பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற சம்பவத்தைக் கண்டித்து, இணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்.பஸ்தரிப்பு நிலையத்தில் யாழ்.மாவட்டத்தில் சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சிற்றூர்தி நடத்துநரும், இன்னுமோர் பயணியும் இராணுவ துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்து, யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிருக்காகப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கின்றனர். படையினரின் இந்தச் செயல் - 2002 பெப்ரவரி மாதத்தில் அரசு - புலிகள் ஏற்றுக்கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்பின், இலங்கை வாழ் மக்கள் அனைவரின் சகோதர, சமத்துவ சகவாழ்வுடன், நிரந்தர அமைதிக்கும், நிம்மதியான சமாதானத்திற்கும் சாவுமணியாக இடம்பெற்றிருக்கிறது.

ஆத்திரமூட்டலோ அநாகரிகப் பண்புகளோ அன்றி ஆரவாரச் செயற்பாட்டு அழுத்தங்கள் ஏதுமின்றி அமைதியாக ஈடுபட்டிருந்த அப்பாவி மக்களை பொதுப் போக்குவரத்து மையத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் நடமாட்டமிக்க சந்தைத் தொகுதியில், பகிரங்கமான முறையில் சகட்டுமேனிக்கு - வெறித்தனமாக காரணமின்றி துப்பாக்கிவேட்டுக்களை இராணுவத்தினர் மேற்கொண்டமை வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

பல தசாப்தங்களாக - போர், உயிரிழப்பு, பொருளாதாரப் பின்னடைவு போன்ற அரசியல் பொருளாதார சமூக வேதனையால் உடல், உளரீதியாக நலிவுற்று புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்பின் தற்போது ஒளிமயமான எதிர்காலத்திற்காக ஒற்றுமையின் அவசியத்திற்காக பாடுபடும் இலங்கை மக்களிடையே மீண்டும் அமைதியின்மையைத் தோற்றுவித்து நாட்டில் வன்முறையைக் கட்டவிழ்த்துவிட முயற்சிக்கும் சதியாகக் கருதவைக்கிறது.

பாதுகாப்பு அமைச்சின் கீழுள்ள படையினரின் இத் தான்தோன்றித்தனமான செயலானது - அப்பாவி மக்களிடையே அரசின் சமாதான நடவடிக்கைகளை சந்தேகம் கொள்ளவைப்பது புலனாகிறது.

நாட்டு மக்களின் அத்தியாவசிய சேவைகளில் ஒன்றான எமது போக்குவரத்து நாடளாவிய ரீதியில் தூயசேவை ஆற்றிவரும் ஒரு தாபனம் - ஜனநாயகப் பண்போடு இயல்புவாழ்வில் ஈடுபட்டிருந்த எமது மக்களை, அடாவடித்தனமான முறையில் அநாகரிகமாக தாக்கிய இராணுவத்தினரின் இச்செயலை எமது தாபனம் வன்மையாகக் கண்டிக்கிறது.

மேலும் - இச்சம்பவத்தை, அரச படையினரின் அராஜகத்தை - அரச சார்பு, அரசசார்பற்ற மனிதநேய அமைப்புக்கள் தங்கள் கண்டனங்கள் மூலம் வெளிப்படுத்தியமைக்கு நன்றி தெரிவிப்பதோடு, இன்று இச்சம்பவத்தை கண்டித்து எமது தாபனம் பரந்தளவில் ஹர்த்தாலை நடத்தத் தீர்மானித்துள்ளது.

மேலும் இதுபோன்ற அசௌகரிய செயற்பாடுகள் தோன்றாதிருக்க ஜனநாயக வழியிலான இப்போராட்டம் வெற்றிபெற அனைத்து மக்களும் அமைதியாக சாத்வீகமாக நடந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நெடுந்தீவில் நுளம்புப் பெருக்கம் அதிகரிப்பு கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை!

## பொதுமக்கள் குற்றச்சாட்டு

மழை காரணமாக நுளம்புகள் பெருகியதனால், மக்கள் பெரும் அசௌகரியங்களை நெடுந்தீவில் எதிர்கொள்கிறார்கள்.

நுளம்பை ஒழிப்பதற்கோ, கட்டுப்படுத்துவதற்கோ இதுவரைக்கும் எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளப்படவில்லையென அப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இது தொடர்பாக நெடுந்தீவு பகுதி சுகாதாரப் பரிசோதகர் தெரிவிக்கையில், இங்கு காணப்படும் நுளம்பு வகை-டெங்குநோயை உருவாக்கக்கூடியதெனவும் இதன் வாழ்க்கைவடிவம் பெரும்பாலும் வீடுகளிலுள்ள உடுபுடைவைகள் மற்றும் உபகரணங்களிலேயே இடம்பெறுகின்றது. இதனால் மருந்து அடிப்பது சாத்தியமற்றது. அத்துடன், அவ்வாறு மருந்தடிப்பதாக இருப்பினும் இங்கு குறிப்பிடத்தக்களவு நுளம்பினால் பாதிப்புற்ற நோயாளர்கள் இருக்கவேண்டும். அத்துடன் மாவட்டத்திற்கு கிடைக்கும் மருந்தின் அளவு குறைவாக இருப்பதனால்தான் நோய்த் தாக்கமுள்ள பகுதிகளுக்கு இம் மருந்து பாவிக்கப்படுகிறது என்றார்.

நோயை 'வருமுன் காப்போம்' என்றால் இங்கு நோய் 'வந்திருந்தால்தான் காப்போம்' என நடவடிக்கை எடுக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (113)

# மக்கள் நடமாட்டம் அதிகரித்த பகுதிகளில் இராணுவத்தினர் தவிர்க்கப்படவேண்டும்!

## நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்தசங்கரி கூறுகிறார்

மக்கள் நடமாட்டம் அதிகமாகவுள்ள பகுதிகளில் இராணுவத்தினர் தமது நடமாட்டத்தை முற்றாக நிறுத்தவேண்டும். இவை அவசரமானதும், அவசியமானதுமான நடவடிக்கைகள்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று, யாழ். பஸ்நிலையப் பகுதியில் இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தைக் கண்டித்து வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் அவரால் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்.நகரில் - நேற்றுமுன்தினம் இராணுவ வீரரொருவர் பத்திரிகை விற்பனையில் ஈடுபட்டிருந்த ஒருவர் மீது நடந்துகொண்ட முறை - சமாதானத்தை விரும்பும் எம்மக்கள், இராணுவத்தினரை சந்தேகக் கண்கொண்டே பார்க்கும்நிலையை உருவாக்கியுள்ளது.

எல்லோரும் எல்லாவற்றையும் மறந்து சமாதானமாக, இயல்பு வாழ்வை விரும்பி அதற்கான ஒத்துழைப்பை வழங்கிக்கொண்டிருக்கும் இவ்வேளையில், இவ்வாறான நடவடிக்கைகள் விரும்பத்தக்க செயலல்ல.

வன்னி மாவட்டத்திலிருந்து யாழ்.மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற்றுச்செல்லும் இராணுவக் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சுசில சந்திரபாலவுக்கு விடுதலைப் புலிகளே ஞாபகப் பரிசு வழங்கிக் கௌரவித்துள்ளனர். அவ்வாறான அதிகாரிகளின் செயற்பாடுகளை முன்னுதாரணமாகக்கொண்டு இராணுவவீரர்கள் எமது மக்களிடம் அன்பாகவும், பண்பாகவும் நடந்துகொள்ளவேண்டிய கடமைப்பாடு அவர்களுக்குண்டு.

சமாதானத்தை விரும்பும் அப்பாவிப் பொதுமக்கள் மீது இவ்வாறான செயலில் ஈடுபடும் இராணுவத்தினர் தமது இத்தகைய செயற்பாடுகளை நிறுத்திக் கொண்டு நடைபெறும் சமாதான முயற்சிகளுக்கு துணைபோகவேண்டிய பொறுப்பு அவர்களுக்குண்டு.

மக்கள் நடமாட்டம் அதிகமாகவுள்ள பகுதிகளில் இராணுவத்தினர் தமது நடமாட்டத்தை முற்றுமுழுதாக நிறுத்திக்கொள்வது மிகவும் அவசரமானதும், அவசியமானதுமாகும்.

தற்போது நாட்டின் பாதுகாப்பு அமைச்சின் பொறுப்பை ஏற்றுள்ள ஜனாதிபதி இராணுவத்தினருக்கு தகுந்த ஆலோசனைகளை வழங்கி சமாதானத்தை விரும்பும் நாட்டுமக்களுடன் இராணுவத்தினரை ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தாலிக்கொடி திருடிய நபர் மக்களால் நையப்புடைப்பு

## நேற்று பருத்தித்துறையில் சம்பவம்

தாலிக்கொடியைத் திருடிய நபர்களை மடக்கிப் பிடித்த மக்கள் நையப்புடைத்து, பிரதேச செயலரிடம் ஒப்படைத்தனர்.

நேற்றையதினம் பருத்தித்துறை வடக்கில் இச் சம்பவம் இடம்பெற்றது.

நேற்றுப் பகல் 10 மணியளவில் கோவிலுக்குச் சென்றுகொண்டிருந்த கிராம அலுவலர் ஒருவரின் மனைவியின் தாலிக்கொடியை மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு நபர்கள் அறுத்து எடுத்துச் செல்ல முற்பட்டபோது, மக்கள் அவர்களை மடக்கிப் பிடித்தனர்.

அந்தத் திருடர்களை அவ்விடத்திலேயே வைத்து நையப்புடைத்த பின்னர் வடமராட்சி வடக்குப் பிரதேச செயலரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

பிரதேச செயலாளரின் மூலம் பருத்தித்துறைப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டு இன்று பருத்தித்துறைப் பொலிசாரின் மூலமாக நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (130,122)



மனித உரிமை தினமான நேற்று - படையினரால் கைதுசெய்யப்பட்டு, காணாமற் போனவர்களின் உறவினர்கள் யாழ்.குடாவிலுள்ள மனித உரிமை ஆணைக்குழு முன்னால், மறியற்'போராட்டத்தில் ஈடுபடுவதைக் காணலாம்.

# இராணுவத்தினரின் கண்மூடித்தனமான செயல்களை ஜனாதிபதி கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்

## ஈ.பி.ஆர்.எல்.எப் (சுரேஷ் அணி) கண்டன அறிக்கை

இராணுவத்தினர் மேற்கொண்டு வரும் கண்மூடித்தனமான செயல்களை - பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதியும், அரசாங்கமும் கட்டுப்படுத்தவேண்டும்.

இவ்வாறு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (சுரேஷ் அணி) தெரிவித்துள்ளது.

நேற்று யாழ்.பஸ்நிலையப் பகுதியில் இளைஞர் மீது இராணுவச் சிப்பாய் மேற்கொண்ட தாக்குதல் சம்பவத்தை கண்டித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரனால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் தமீழீழ விடுதலைப் புலிகளுக்கும் - அரசுக்கும் இடையில் ஓர் யுத்தநிறுத்தம் ஏற்பட்டு இருபது மாதமாகியும்கூட, இராணுவத்தின் முறுகல்நிலை இன்னும் மாறவில்லை.

தமிழ்மக்களின் வளமான நிலத்தில் பெரும்பகுதியை ஆக்கிரமித்து, அதியுயர் பாதுகாப்பு வலயம் எனப் பெயரிட்டு அவர்களைத் தமது சொந்த இருப்பிடங்களுக்கு செல்வதற்கு மறுத்துவரும் இராணுவம் இப்பொழுது அப்பாவி மக்களுக்கு எதிராக மீண்டும் துப்பாக்கி ஓங்கியிருப்பது மிகவும் கண்டிக்கத்தக்கது.

புலிகளும், அமைச்சர்களும் பேச்சுவார்த்தை நடத்திவருகிறார்கள். புலிகள் இராணுவப் பிரதேசங்கள் என்று அழைக்கப்படும் இடங்களில் தமது அரசியல் வேலைகளைச செய்துவருகிறார்கள். அதேபோன்று, இராணுவ ஆக்கிரமிப்பு பிரதேசங்களில் மாவீரர் விழாக்களையும் கொண்டாடி வருகிறார்கள். இவைகளை அனுமதிக்கும் அரசும், இராணுவமும் பதினாறு வயது இளைஞன பத்திரிகை விற்பதை ஏன் தடைசெய்யவேண்டும். நாட்டில் ஏற்பட்டிருக்கக்கூடிய யுத்தநிறுத்தத்தையும் சமாதான சூழலையும் குழப்ப பல்வேறுபட்ட சக்திகள் முயற்சிசெய்து வருகின்றன. கிழக்கு மாகாணத்தில் ஒரு சில சக்திகளால் ஏற்படுத்தப்பட்டுவரும் தொடர்ச்சியான கொலைகள், கடற்பகுதிகளில் கடற்படையினரின் அத்துமீறிய செயல்கள் யாவும் யுத்தமொன்றை மீள ஆரம்பிப்பதற்கு நோக்கமாகக் கொண்ட முயற்சிகள் என்றே நாங்கள் ஐயப்படுகின்றோம். யாழ்ப்பாணத்தின் துப்பாக்கிச்சூடும், இதனை அடியொற்றிய செயலாகவும் இருக்கலாம் என சிந்திக்க வைக்கின்றது. இராணுவத்தினரின் அத்துமீறல்கள் அடாவடித்தனங்கள் என்பன விடுதலைப் புலிகளுக்கு ஆத்திரமூட்டி அவர்களை யுத்தத்திற்கு இழுப்பதாகவே அமைந்து வருவது வேதனைக்குரியது.

எனவே, இராணுவத்தினரின் இக் கண்மூடித்தனமான செயல்களுக்கு பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதியும், அரசாங்கமும்தான் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். ஏற்கனவே நாட்டில் ஓர் நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டு யுத்தநிறுத்தம் அச்சுறுத்தலுக்குள்ளான சூழ்நிலையில்- இராணுவத்தினரின் அடாவடித்தனங்கள் அதை மேலும் பாதிக்கும் என்பதே உண்மை.

எனவே, யுத்தநிறுத்தத்தையும், பேச்சுவார்த்தையையும் பாதிக்கக்கூடிய இச்செயல்கள் எதிர்காலத்தில் ஏற்படாவண்ணம் செயற்படுவதே புத்திசாலித்தனமானதாக, அரசுக்கு சிறப்பானதாக இருக்கும். இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் காயப்பட்ட இளைஞர்கள் விரைவில் குணமடைய வாழ்த்துவதுடன், எமது முழுமையான எதிர்ப்பை இராணுவத்தினருக்கும், அரசுக்கும் காட்டவேண்டியது எமது கடமையாகும். எனவே, நாளை நடைபெறவுள்ள ஹர்த்தாலில் முழுமையாகப் பங்குபற்றி எம[...] எதிர்ப்பை காட்டுமாறு யாழ்.கு[...] நாட்டின் பொதுமக்களை அழைக்கி[...]றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஓ குறூப் இரத்தம் அவசரம் தேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்தவங்கியில் O பொசிட்டிவ் ($O^+$) இரத்த வகை பெருமளவில் அவசரமாகத் தேவைப்படுகிறது.

O பொசிட்டிவ் இரத்தவகை உடையவர்கள் யாராவது இரத்தம் கொடுப்பதற்கு முன்வருபவர்கள் - யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியின் வைத்திய அதிகாரியுடன் தொடர்புகொள்ளுமாறு, இரத்தவங்கி வைத்திய அதிகாரி கேட்டுக்கொள்கின்றார்.

திறைஞ்சனாஸ் சங்கானை
அஜித் மீராஜஸ்மின் நடித்த
ஆஞ்சநேயா
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
GET GARTER
(சி-1846)

ராஜா யாழ்ப்பாணம்.
தருண், த்ரிஷா, விவேக், மணிவண்ண்ன் நடித்த
எனக்கு 20 உனக்கு 18
காட்சிநேரம் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(சி-1847)

# இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்காக அரசியற்கட்சிகள் ஒன்றிணைய வேண்டும்!

## ஜனாதிபதியின் ஊடகப்பேச்சாளர் ஹரீம் பீரிஸ்

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு, இரு பிரதான கட்சிகள் உட்பட, அனைத்து அரசியற் கட்சிகளும் ஒன்றிணைந்து, சமாதான முயற்சியை முன்னெடுத்துச் செல்லவேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதியின் ஊடகப்பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்தார்.

நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஊடகவியலாளர் மத்தியில் அவர் உரையாற்றும்போது, மேலும் தெரிவித்ததாவது -

இரு பிரதான கட்சிகள் இணைந்து நீண்டகாலமாக நாட்டில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியாது. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு நாட்டிலுள்ள அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து, சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்லவேண்டும். இதன்மூலமே தீர்வை எட்டமுடியும். ஒரு கட்சி மட்டும் சமாதான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லமுடியாது. இது ஒரு கடினமான விடயமாகும்.

எனவே, தீர்வு ஒன்றைக் காண வேண்டுமாயின், அரசியல் சாசனத்தில் திருத்தம் செய்யப்படல்வேண்டும். மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாது, அரசியல் சாசனத்தில் தீர்வு ஒன்றைக் காணமுடியாது. நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு வாக்குகளைப் பெறவேண்டுமாயின், குறைந்தபட்சம் இரண்டு பிரதான கட்சிகளும் இணைவது அல்லது ஏனைய கட்சிகள் இணைவது அவசியமானது. சமாதான செயற்பாடுகளைத் தொடர்ந்தும் ஒரு கட்சி முன்னெடுத்துச் செல்லமுடியாது.

பாதுகாப்பு அமைச்சைத் தொடர்ந்தும் தன்வசம் ஜனாதிபதி வைத்து இருக்கப்போவதாகவும் அவர் தெரிவித்தார். பாதுகாப்பு நடவடிக்கைகள் தான் முதல் குறிப்பிட்டதுபோல ஜனாதிபதியின் கீழ் முன்னெடுத்துச் செல்லப்படும். இது ஓர் அரசியல் சாசனத்தேவை. இதை உச்ச நீதிமன்றத் தீர்ப்பு உறுதிபபடுத்தியுள்ளது என தெரிவித்தார். (01)

# நாணயமாற்று நடைமுறையை நிதியமைச்சு கையாளலாம்

## உயர் நீதிமன்றம் தீர்ப்பு

மத்தியவங்கி கையாண்டுவரும் நாணயமாற்றுவீதம் தொடர்பான விடயங்களை, நிதியமைச்சு கையாளலாம் என்ற பிரேரணை தொடர்பான தீர்ப்பினை - உயர்நீதிமன்றம் நேற்று முன்தினம் இரகசியமான முறையில் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் தனித்தனியாக அனுப்பி வைத்துள்ளது.

மத்திய வங்கியிடமிருந்து வரும் நாணயமாற்று நடைமுறையை, நிதியமைச்சு பொறுப்பேற்பது என அரசாங்கம் - நாடாளுமன்றத்தில் கொண்டுவந்த பிரேரணை - யாப்புக்கு முரணானது எனத் தெரிவித்து, சட்டத்தரணி ஒருவர் உயர்நீதிமன்றில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த வழக்கை நேற்றுமுன்தினம் விசாரித்த உயர்நீதிமன்ற நீதியரசர் ரி.வி.விக்னேஸ்வரன் - இது தொடர்பான தீர்ப்பை இரகசியமான முறையில் அரசாங்கத்தரப்பினருக்கும், ஜனாதிபதிக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

இதேவேளை - இத்தகைய முரண்பட்ட விடயங்கள் நீதிமன்றங்களில் விசாரிக்கப்படுவது, நாட்டில் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுவரும் தற்போதையநிலைக்கு உகந்ததல்ல என நீதியரசர் அங்கு மேலும் தெரிவித்தார். (01)

# மூன்று சிறுவர்களின் கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர் ஹபரணைப் பொலிஸாரால் கைது

ஹபரணப் பகுதியில் மூன்று சிறுவர்கள் பலியான சம்பவத்தோடு தொடர்புடையவர் எனக் கருதப்படும் இராணுவச் சிப்பாய் ஒருவர் -ஹபரணைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது, அவரைத் தொடர்ந்து 15 நாட்களுக்குத் தடுப்புக்காவலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

ஹபரணைப்பகுதியிலுள்ள தனது வீட்டுக்கு விடுமுறையில் வந்த இந்த இராணுவச் சிப்பாய்- நான்கு கைக் குண்டுகளைக் கொண்டுவந்ததாகவும், அவை நான்கையும் ஓரிடத்தில் பதுக்கி வைத்ததாகவும், அதிலொன்றைச் சிறுவர்கள் மூன்று பேரும் எடுத்து விளையாடியபோதே, அது வெடித்து, மூன்று சிறுவர்களும் பலியானதாகத் தெரிவிக்கபபடுகிறது.

## பஸ் விபத்தில் 35 பேர் காயம்

(கொழும்பு)

தம்புள்ளவில் நடைபெற்ற பஸ் விபத்தொன்றின்போது, அதில் பயணம் செய்த 35 பேர் காயமடைந்துள்ளனர்.

சிலாபத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருநதபோது, பஸ் பாதையைவிட்டு விலகிப் பள்ளத்தாக்கிற்குள் விழுந்ததாகவும், அதன்போதே 35 பேர் காயமடைந்ததாகவும், அதில் 2 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.





கடந்த சனிக்கிழமை லண்டன் எக்சல் மண்டபத்தில் நடைபெற்ற மாவீரர்தின நிகழ்வில் சில காட்சிகளைப் படத்தில் காணலாம்.

# 500 பவுண்களை அறவிட பிரிட்டிஷ் அரசு திட்டம்

குடியேற்றவாசிகளிடமிருந்து 500 பவுண்கள் அறவிட, பிரிட்டிஷ் அரசு திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரிட்டனில் வசிக்கவோ, தொழில் புரியவோ, கல்வி கற்கவோ விரும்பும் அனைத்து வெளிநாட்டவர்களிடமிருந்து, 500 ஸ்ரேலிங் பவுண்களை மேலதிகமாக அறவிடுவதற்குப் பிரிட்டிஷ் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

பிரிட்டிஷ் அரசு மேற்கொள்ளவுள்ள இந்த நடவடிக்கையால், ஒவ்வொரு வருடமும் பிரிட்டிஷுக்குள் வரும் 9 இலட்சம் வெளிநாட்டவர்கள் பாதிக்கப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, பிரிட்டிஷில் வாழ்பவர்களுடன் இணைந்து வாழவிரும்பும் அவர்களது குடும்பத்தவர்களும் இந்த மேலதிக கட்டணங்களைச் செலுத்தவேண்டும். ஆனால், புகலிடம் கோருவோர் இதிலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளனர்.

தற்போது, அனுமதிக்கப்படும் வேலை அனுமதிக் கட்டணத்திலும் பார்க்க, மேலதிகமாகத் திட்டமிடப்பட்டுள்ள கட்டணம் அமைந்துள்ளது.

இதேவேளை, வேலை அனுமதிக்கான கட்டணம் ஒன்றை வருடம் ஒன்றிற்கு 95 ஸ்ரேலிங் பவுணிலிருந்து 105 ஸ்ரேலிங் பவுணாக அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டங்கள் யாவும், நிறைவேற்றப்படுமாயின் பிரிட்டனுக்குள் வேலைக்குச் செல்லும் ஒருவருக்கான கட்டணம் 622 ஸ்ரேலிங் பவுண்களுக்கு அதிகமாக அதிகரிக்கப்படும்.

பிரிட்டனில் வாழும் குடும்பத்துடன் இணைய விரும்புபவர்கள், பிரிட்டிஷ் கடவுச்சீட்டைக் கோரவுள்ளார்கள். தமது காலத்தை நீடிக்க விரும்பும் மாணவர்கள் செலுத்தும் 155 ஸ்ரேலிங் பவுணுக்குப் பதிலாக, 655 ஸ்ரேலிங் பவுண் செலுத்த வேண்டிவரும்.

இந்த நடவடிக்கைகள்மூலம், குடியேற்றவாசிகளிடமிருந்து பிரிட்டிஷ் அரசாங்கம் வருடம் ஒன்றிற்கு 500 மில்லியன் ஸ்ரேலிங் பவுணைப் பெற்றுக்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆயினும், பிரிட்டனின் புகலிட நடைமுறை காரணமாகக் காற்பங்கினை மாத்திரம் இதன்மூலம் பெற முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# அமைச்சர்கள் 12 பேர் மீது இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டு

பொ.ஐ.முன்னணி அரசாங்கத்தின் அமைச்சர்கள் 12 பேரினது ஊழல்கள் குறித்து, இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்போவதாக கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வீடமைப்பு அமைச்சர்களுக்கான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, இதனைத் தெரிவித்தார்.

மேலும் 22 அமைச்சர்களுக்கு எதிராகவும், இலஞ்ச ஊழல் குற்றங்கள் இருப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, சுகாதார ஊழியர்களின் சம்பள உயர்வு தொடர்பான ஒத்திவைப்பு விவாதம் ஒன்றுக்கு அமைச்சர் பி.தயாரட்ண நேற்று பதிலளிக்க இருந்தபோதும் இவர் சபைக்கு வராமையைக் கண்டித்து பொ.ஐ.மு உறுப்பினர்கள் சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர். (01)

# நாடாளுமன்ற உறுப்பினரின் தொலைபேசி அமர்வின்போது காணாமற் போயுள்ளது!

இரத்தினபுரி நாடாளுமன்ற உறுப்பினர் அசோக ஜயவர்த்தனவின்- மேசையில் வைக்கப்பட்டிருந்த கையடக்க தொலைபேசி காணாமல் போயுள்ளதாக, சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேராவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாகத் தெரியவருவதாவது -

நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வின்போது, பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுபபினரான அசோக ஜயவர்த்தன, தன்னுடைய மேசைமீது வைத்துவிட்டுப்போன கையடக்கத் தொலைபேசியை காலையில் வந்து பார்த்தபோது காணவில்லையாம்.

இதனை விசேட நடவடிக்கைகளுக்கான பொலிஸார்தான் கைப்பற்றியிருக்கலாம் எனவும், அவ்வாறு அவர்கள் இதனை எடுப்பதற்கு எந்தவித அதிகாரமும் இல்லை எனவும், இதேபோன்று முன்னரும் ஐ.தே கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான ஜயந்த கருணாதிலகவினுடைய தொலைபேசியும் காணாமல் போனதாகவும் - சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுதொடர்பாகச் சம்பந்தப்பட்ட விசேட பொலிஸ் அதிகாரிகளிடம் விசாரணைசெய்து, பெற்றுத்தருவதாகவும் சபாநாயகர் உறுதியளித்துள்ளார்.

# பொ.ஐ.மு. ஆதரவாளர்களின் வீடுகள் மீது கொழும்பில் தாக்குதல்

(கொழும்பு)

வெள்ளவத்தைப் பிரதேசத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆதரவாளர் சிலரின் வீடுகள்மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது. ஏற்கனவே இந்த பிரதேசத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்கள் தாக்கப்பட்டு, அவர்களின் வீடுகளும் எரியூட்டப்பட்டன.

இத்தகைய சம்பவங்களைக் காரணங்காட்டியே, ஜனாதிபதி சந்திரிகா பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

நேற்றைய சம்பவத்தில் பலர் காயமடைந்ததுடன், வீடுகளுக்கும் எரியூட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (01)

## திருமலையில் உருவாகும்

# அசம்பாவிதங்களைத் தடுப்பதற்கு அனைத்து தரப்பினரும் உதவவேண்டும்

## பொலிஸ் அத்தியட்சகர் வேண்டுகோள்

(கொழும்பு)

திருகோணமலை நகரில் அசம்பாவிதங்கள் திடீரென்று உருவாகுவதாகவும், இவ்வாறான அசம்பாவிதங்களைத் தடுத்து நிறுத்துவதற்குப் பொலிஸாருடன் அனைத்துத் தரப்பினரும் பூரண ஒத்துழைப்பை வழங்க முன்வரவேண்டும் என்றும், திருகோணமலை பொலிஸ் அத்தியட்சகர் தயா சமரவீர தெரிவித்தார்.

திருகோணமலையில் அமைதியையும், சமாதானத்தையும் தொடர்ந்து நிலைநிறுத்தும் வகையிலான, விசேட கூட்டமொன்று நேற்று முன்தினம் சிறி சண்முகா இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் பொலிஸார் சமாதான பிரதிநிதிகள் குழுவினர், கிராம சேவையாளர்கள் மற்றும் பொதுமக்கள் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். இதன்போது தயாசமரவீர மேலும் தெரிவிக்கையில் - மக்களுடைய பூரண ஒத்துழைப்பும், ஏனையவர்களுடைய ஆதரவும் கிடைக்கும்பொழுதுதான் பொலிஸாரினால் சட்டத்தையும், ஒழுங்கையும் முழுமையாக நிலைநிறுத்த முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.



மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு கைது செய்தோர் காணாமற் போனோர் பாதுகாலர் சங்கம் - நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகம் முன்பாக நடத்திய மறியற் போராட்டத்தின் ஒரு காட்சி. (ச)

# படையினரைக்கண்டு விலக முற்பட்ட இளைஞன்மீதே துப்பாக்கிப்பிரயோகம்!

## இராணுவப் பேச்சாளர் கூறுகின்றார்!

யாழ்.நகரில் பத்திரிகை விற்பனை செய்த இளைஞர்களைப் படையினர் நெருங்கியபோது, அங்கிருந்து விலக முற்பட்டவேளையே, படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக இராணுவப் பேச்சாளர் கேணல் சுமேத பெரேரா தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் - யாழ். நகரப் பகுதியில் பத்திரிகை விநியோகித்த இளைஞர் ஒருவன்மீது, துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. இதன்போது தனியார் வாகன சாரதி ஒருவரும் காயமடைந்தார்.

இந்த சம்பவம் தொடர்பாக ஊடகம் ஒன்றுக்குஅளித்த பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். யாழ்.நகர பஸ்நிலையப் பகுதியில் இளைஞன் ஒருவர் பத்திரிகை விநியோகித்து கொண்டிருந்தார். இதனை அவதானித்த இராணுவத்தினர் ஒருவர், அவரை நோக்கிச் சென்றுள்ளார். இதனால், அவர் அங்கிருந்து விலகிசெல்ல முற்பட்டபோது, அவர்மீது துப்பாக்கிப் பிரயோகம் செயயப்பட்டது என சுமேத பெரேரா தெரிவித்தார்.



ஆசிரிய நியமனம் வழங்கக் கோரி யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி டிப்ளோமா தாரிகள், சங்கத்தினர் மறியற் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம். (ச)

### சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை - வெள்ளிக்கிழமை தோறும் நடாத்திவரும் வாராந்த நிகழ்வில், நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்குப் பெரியபுராணம் தொடரில் யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் அ.குமாரவேல் சொற்பொழிவாற்றவுள்ளார்.

இதன் அறிமுகவுரையை லயன் கே.செல்வரத்தினம் வழங்குவார். (17)

### மலசலகூட வசதி

ஈவினைப் பிரதேசத்தில் வறுமைக் கோட்டிற்குட்பட்ட குடும்பங்களில், மலசலகூட வசதியற்ற ஏழு குடும்பங்களுக்கு, லீட்ஸ் நிறுவன உதவியுடன் மலசலகூடங்கள் அமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இங்கு முதற்கட்டமாக ஏழு குடும்பங்களுக்கு நிரந்தர மலசலகூடம் அமைப்பட்டுவருவதுடன், ஏனையவர்களுக்கும் கட்டங்கட்டமாக அமைத்துக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும். தெரிவிக்கப்படுகின்றது. (83)

## யாழ்.பல்கலைக்கழக

# மருத்துவபீட 20 ஆம் அணி மாணவர்கள் நேற்று மறியல் போராட்டத்தில் குதிப்பு !

(யாழ்ப்பாணம்)

விரிவுரையாளர்களுக்கிடையிலான போட்டியைக் காரணமாக வைத்து, மாணவர்களின் கல்வியைப் பாதிக்கச் செய்ய வேண்டாம் எனக் கோரி, யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட 20 ஆம் அணி மாணவர்கள் - நேற்றுப் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்

நரம்பியல் நிபுணர் எஸ்.குணானந்தன் - யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் மீண்டும் சேவைகளை ஆரம்பிக்கவுள்ளார். இதனை, மருத்துவபீடத்தில் ஏற்கனவேயுள்ள சில விரிவுரையாளர்கள் எதிர்த்து வருகின்றனர்.

குணானந்தன் விரிவுரைகளை நடத்த அனுமதி வழங்கப்படுமாகவிருந்தால், தாம் விரிவுரைகளைப் பகிஷ்கரிக்கப் போவதாக இவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இதனால், பல்கலைக்கழக மாணவர்களின் பயிற்சிநெறிசார்ந்த கற்கைநெறிகள் பாதிப்படைந்துள்ளன. இதற்கு எதிர்ப்பு தெரிவித்தே, மாணவர்கள் நேற்று பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, இவ்விடயம் நீதிமன்ற விசாரணையில் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# உரும்பிராய் மாணவி மரணம் ! காவலாளியின் விளக்கமறியல் நீடிப்பு

ஐந்தாம் ஆண்டு பாடசாலை மாணவியொருவரின் மரணம் தொடர்பாக, கைது செய்யப்பட்ட பாடசாலை காவலாளியை மேலும் பதினான்கு நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிவான் நிதிமன்ற நீதிவான் - ஸ்ரீநிதி நந்தசேகரம் உத்தவிட்டார். சில மாதங்களுக்கு முன் உரும்பிராய் சந்திரோதயா வித்தியாசாலையைச் சேர்ந்த மாணவியான - எஸ்.துவாரகா என்பவர், சந்தேகத்துகிடமான முறையில் பாடசாலை கிணற்றுள் இருந்து சடமலாக மீட்கப்பட்டிருந்தார். இந்த மரணத்துடன் தொடர்புடையவர் எனும் சந்தேகத்தில், பாடசாலை காவலாளியான தில்லையம்பலம் ரமணன் என்பவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, யாழ்.சிறைச் சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்த மரணம் தொடர்பான சுருக்கமுறையற்ற வழக்கு விசாரணைகள் நேற்று முன்தினம் - யாழ்.நீதிவான் நீதிமன்றில் நடைபெற்றது. இதன்போது மேலும் இரு சாட்சிகளின் வாக்குமூலங்கள் பதிவுசெய்யப்பட்டன.

# சாரதி அனுமதிப்பத்திரங்கள் யாழ்.செயலகத்துக்கு வந்துள்ளன

நடமாடும் சேவையில் உறுதியளிக்கப்பட்டபடி, 5 ஆயிரம் சாரதி அனுமதிப்பத்திரங்கள் நேற்றுமுன்தினம் யாழ்.செயலகத்துக்கு எடுத்துவரப்படிருப்பதாக யாழ்.பிராந்திய மோட்டார் திணைக்கள பிராந்திய உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் தெரிவித்தார்.

கடந்தவாரம் கொழும்புக்குச் சென்றுவிட்டு, நேற்று முன்தினம் யாழ்.திரும்பிய அவரிடம், கடந்த மாதம் சாரதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. இது குறித்துக் கேட்கப்பட்டபோதே, அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது -

கடந்த மாதம் யாழ். செயலகத்தில் நடத்தப்பட்ட நடமாடும் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் நடவடிக்கையானது, முழுமையாக வெற்றியளித்திருக்கிறது.

அன்றைய சேவையில் சாரதி அனுமத்திப்பத்திரம் பெறுவதற்கான பரீட்சைகளில் தோறறிய மாணவர்களுக்கான சாரதி அனுமதிப்பத்திரங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. இதனைவிட, ஏற்கனவே இடம்பெற்ற பரீட்சைகளில் தோற்றிச் சித்தியெய்தியவர்களின் சாரதி அனுமதிப்பத்திரங்களுமாக, மொத்தம் 5 ஆயிரம அனுமதிப் பத்திரங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. இதனைவிட வாகனப்பதிவுச் சானறிதழுக்காக விண்ணப்பித்தவர்களின் 17 ஆயிரத்து 700 பதிவுச் சான்றிழ்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. அத்துடன், எம்மிடம் 2 ஆயிரம் வரையிலான வாகன இலக்கத்தகடுகள் தற்போது தேங்கியநிலையில் உள்ளன.

இவற்றையெல்லாம் விநியோகிப்பதற்கான விசேடசேவை, எதிர்வரும் 13 ஆம், 14 ஆம் திகதிகளில் யாழ். செயலகத்தில் இடம்பெறவுள்ளன. அன்றைய தினத்தில் காலை 9.30 மணிமுதல், பிற்பகல் 3.30 மணி வரையும் தமக்குரிய ஆவணங்களை உரியவர்கள் பெற்றுக்கொள்ளமுடியும்.

இதேவேளை, உடமை மாற்றத்துக்காக விண்ணப்பிக்கப்பட 89 வாகனங்களின், உடமைகள் கொண்டு வரப்பட்டிருப்பதால், உரியவர்கள் அவற்றையும் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ப)

### பயன்தரும் மரக்கன்றுகள் விநியோகம்

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திச் சங்க கொத்தணியின் கீழ்லுள்ள, ஆறு பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கத்தின் பணிப்பாளர்கள் மற்றும் பணியார்களுக்குப் பயன்தரு பழமரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

சங்கங்களின் கொத்தணியால் எலுமிச்சை, தோடை, மா, பலா மற்றும் கமுகு போன்ற பயன்தரு பழமரங்கள், வெகுவிரைவில் அபிவிருத்திச் சங்கப் பணிப்பாளர்கள், பணியாளர்களுக்கு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (83)

# கணவனை கைதுசெய்த பொலிஸார் தாக்கியதாகப் பெண் முறைப்பாடு!

(யாழ்ப்பாணம்)

திருட்டுக் குற்றச்சாட்டின் பேரில் வீட்டில் வைத்துப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட கணவன், அவர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டதாகத் தெரிவித்து, பெண்ணொருவர் - யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

டச்சு வீதி, சாவகச்சேரியைச் சேர்ந்த பெண்ணொருவரே, சாவகச்சேரி பொலிஸாருக்கு எதிராக இந்த முறைப்பாட்டைத் தெரிவித்துள்ளார்.

அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்திருப்பதாவது - கணேசு சதாசிவம் (வயது 27) ஆகிய எனது கணவன், கடந்த வெள்ளிக்கிழமை மின்பிறப்பாக்கியொன்றைத் திருடியதாகத் தெரிவித்து, அதேஇடத்தைச் சேர்ந்த ஒருவர் கொடுத்த முறைப்பாட்டையடுத்து, சாவகச்சேரிப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

அன்றையதினம், நான் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்திற்குச் சென்றபோது, எனது கணவர் கடுமையாகத் தாக்கப்பட்டு நடக்கமுடியாது இருந்தார்.

தற்போது நானும், எனது மூன்று பிள்ளைகளும் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளோம்.

எமது பாதுகாப்பின் மையாலும், எனது கணவன்மீதுபொய்யான திருட்டுக்குற்றம் சுமத்தியுள்ளதால், ஆபத்துவர வாய்ப்புள்ளதால், தயவு செய்து எனது கணவனின் விடுதலைக்கு உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன் எனத் தெரிவித்தார்.

வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

நான்காவது அகவையில்

பெயர் : தெ.திலக்ஷன்
முகவரி : சேமன் வீதி, கரவெட்டி



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------
முகவரி :------------------------
பிறந்த ஆண்டு:------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------
பெற்றோர் ஒப்பம்






# திறமை, முயற்சி இருக்குமானால் எந்தத் தொழிலையும் செய்யலாம்

ஓவியங்கள் வரைதல், பெயர்ப்பலகைகள் எழுதுதல், மை இல்லாது பாவனைக்குட் படுத்தும் (**Rupper Stamp**) இறப்பர் முத்திரைகள் செய்தல் போன்ற பல்வேறு தொழில்களைச்செய்து வருகின்றார் 'யசோ நிறுவன'த்தின் உரிமையாளர் சின்னத்துரை யசோதரன். அவரைச் சந்தித்து உரையாடினோம். கன்னாதிட்டி வீதியில் 35 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள இந்த யசோ நிறுவனம் - சிறியதான ஒரு இடத்தில் அமைந்துள்ளபோதிலும், அங்கு பல வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. 'ஸ்கிறீன் பிறிண்டிங்' வேலைகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.



**நீங்கள் இந்த நிறுவனத்தை ஆரம்பிக்கும்போது, உங்களின் பிரதானநோக்கம் எதுவாக இருந்தது?**

இந்த நிறுவனத்தினை நான் ஆரம்பிக்கும்போது, எனது பிரதான நோக்கம்-படம் வரைதலாகவேயிருந்தது. பின்னர் படிப்படியாகப் பெயர்ப்பலகைகள் எழுதுதல், பிளாஸ்ரிக் வேலைகள், ஓவிய வேலைகள், பல்வேறு வகையான பலகைகளைக் கீறுதல், றபர்ஸ்ராம்ப் (புதியவகை - மை விடத்தேவையில்லை), ஸ்கிறீன் பிறின்டிங், அலுமினிய வேலைகள், சில்வர் முதலியவற்றில் எழுதுதல், கீறிதல், பாடசாலை மாணவர்களுக்கான சின்னங்கள் (**Batch**) போன்ற பல வகையான வேலைகளைச் செய்கின்றோம்.

**உங்களுக்கு ஓவியத்துறையில் ஆர்வத்தை ஏற்படுத்தியவை எவை எனக் கூறுவீர்களா?**

நான் ஓவியர் மணியத்திடம் ஓவியம் தொடர்பான நுணுக்கங்களையும், வேலைகளையும் பழகினேன். 13 வருடங்களாக இந்தத் துறையில் மிகவும் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றேன். ஓவியர் மணியம் அண்மையில் எனது நிறுவனத்திற்கு வருகை தந்து, தன்னிடம் ஓவியம் பயின்ற மாணவர்களில் நான்தான் நல்லநிலையில் அந்தத் துறையில் வளர்ந்திருக்கின்றேன் எனப் பாராட்டிச்சென்றார். 1991 ஆம் ஆண்டு முதல்முதலில் தமிழ்மொழியில் சித்திரம் தொடர்பான புத்தகத்தினை எழுதினேன். இன்றுவரை 9 புத்தகங்கள் வரை எழுதியுள்ளேன். அதனைத் தொடர்ந்த ஏனையோர் தமிழில் சித்திரம் தொடர்பான புத்தகங்களை எழுதினர். அந்தப் புத்தகங் களை எழுதும்போது, நான் ஒரு ஓவியன் இல்லை. எந்தவிதமான படத்தினையும் வரையமாட்டேன். பின்னர்தான் படங்களைக் கீறிப்பழகிக்கொண்டேன். ஓவியனாக வரவேண்டும் என்ற ஆசையும், ஆர்வமும் அப்போது தான் எனக்கு ஏற்பட்டது.

**உங்களுடைய ஆசையையும், ஆர்வத்தையும் நிறைவுசெய்யும் பொருட்டாக உங்கள் பயிற்சி அமைந்ததா?**

ஆம், என்னுடைய ஆர்வம் காரணமாகவே ஓவியர் மணியத்திடம் சென்று, ஓவியம் கற்றுக்கொள்ளவேண்டும் என்ற எனது ஆசையைக் கூறினேன். அவரும் அதனை ஏற்றுக்கொண்டு, சிறந்தமுறையில் எனக்கு ஓவியம் தொடர்பான பயிற்சிகளை கற்றுத்தந்தார்.

ஆரம்பத்தில் சிறுசிறு ஓவிங்களை வரையக் கற்றுக்கொண்டேன். சிறிது காலம் தான், நான் அவரிடம் ஓவியம் தொடர்பான பயிற்சிகளைப் பெற்றுக்கொண்டது. அதன் பின்னர் ஏதாவது ஒரு தொழில் செய்ய வேண்டுமென்ற சூழ்நிலைக்கு நான் தள்ளப்படடதனால், இந்த 'யசோ' நிறுவனத்தை அமைத்தேன்.

**உங்களுக்கு வரும் தொழில்கள் பற்றிச் சற்றுக் கூறுவீர்களா?**

மாவீரர்தினத்தின்போது கட்டப்படும் வளைவுகளுக்குத்தான் நான் முதலில் ஓவியஙகளை வரைந்தேன். அதுதான் எனது தொழில் ஆரம்பமாகவும் இருந்தது. மாவீரர் தினததிற்காக அமைக்கப்பட்ட வளைவுகளில் எனது எழுத்துக்களும், ஓவியங்களும் இருப்பதனைக் கண்டு மகிழ்ச்சியடைந்தேன். தொடர்ந்து 13 வருடங்களாக இன்றுவரை இந்த தொழிலில் ஈடுபட்டு வந்தாலும், முதல் முதலில் மாவீரர்களுக்காக அமைத்த வளைவுகளுக்கு எழுதி, ஓவியங்கள் வரைந்து கொடுத்ததை நினைத்து மகிழ்ச்சியடைகின்றேன்.

**இந்தத் தொழில் உங்களுக்கு இலகுவாக இருக்கின்றதா? சிரமங்கள் எதையாவது எதிர்நோக்குகிறீர்களா?**

ஓவியத்தொழில் ஒரு சுலபமான தொழிலாகும். பெயின்ரும், பிறஸ்சும் இருந்தால் செய்துகொள்ளலாம். படம் கீறுகின்ற தன்மை மனத்தில் இருந்தால், அதைக்கொண்டு செய்யக்கூடிய வகையில் இந்தத் தொழில் அமைந்துள்ளது. பெயின்ற், பிறஸ் ஆகியவற்றை குறைந்த செலவில் வாங்கமுடியும். சிரமம் என்று எதுவுமில்லை. இருக்கும் திறமையைக்கொணடு முயன்று, முன்னேறக்கூடிய ஒரு சிறந்த தொழில் இது.

**உங்களின் ஆரம்பத் தொழில நிலை பற்றியும், தற்போதைய தொழில்நிலை பற்றியும் கூறுங்களேன்?**

ஆரம்பத்தில், எனக்கு ஒரு வேலைவந்தால், அந்த வேலையைக் கொண்டு வருபவரிடம் முதலில் முற்பணமாகப் பணத்தை வாங்கி, அந்தப் பணத்திலேயே பெயின்ரை வாங்கி ஓவியங்களை வரைந்து கொடுத்தேன். என்னுடைய மனத்தில் தோன்றிய உணர்வுகளை, வடிவங்களைக் கலையாக வடித்தேன். முதலில் எந்தவிதமான முதலையும் நான் இடவில்லை. அதனால், இந்தத் தொழில் எனக்கு நன்மையையும், வளர்ச்சியையும் பெற்றுத்தந்தது. ஆரம்பத்தில் படங்களை வரையும்போது, பெரிய ஓவியனாக வருவேன் என்றோ, இந்தளவு பெயர் எனக்குக் கிடைக்கும் என்றோ நான் கருதவில்லை. ஒரு சாதாரணமான தொழிலைச் செய்துவருகின்றேன் என்ற உணர்வுடனேயே செய்துவந்தேன். என்னுடைய தொழிலுக்கு ஒரு திருப்புமுனையாக அமைந்த சம்பவம் என்னவெனில், கம்பன்விழா யாழ்ப்பாணத்தில் நடத்திய போது, அந்த விழாவில் எனக்கு கம்பன் கழகத்தினரால் விருது வழங்கிக் கௌரவிக் கப்பட்டது.

அன்று மிகவும் மனப்பூரிப்பு அடைந்ததோடு, என்னை நான் உணர்ந்துகொண்டேன். அத்தோடு, மற்றவர்களும் என்னை உணர்ந்து கொண்டார்கள் என்றுதான் நினைக்கின்றேன். அந்த விருதிற்குப் பின்னர் எனக்கு நிறைய ஓடர்கள் கிடைத்தன. வேலைகளும் அதிகமாயின. தொழில்நிலையில் கொஞ்சம் மும்முரமான ஆளாக நான் மாறத்தொடங்கினேன். அத்தோடு ஏராளமான, கோயில்களுக்கும், கடைகளுக்கும் - பெயர்ப்பலகைகளையும், ஓவியங்களையும் வரைந்து கொடுத்துள்ளேன். அதனால், என்னைத்தேடி வேலைகள் அதிகரித்துக்கொண்டு வந்தன.

**உங்கள் நிறுவனத்தில் பணிபுரியும் பணியாளர்கள் பற்றியும், பயிற்சிகள் பற்றியும் கூறுங்கள்.**

தற்போது யசோ என்ற இந்த நிறுவனத்தில் நேரடியாக 15 பேர் வேலை செய்கின்றனர். மறைமுகமாக முகவர் என்ற பெயரில் 15 பேர் வரையில் வேலைசெய்கின்றார்கள். இவர்கள் ஓடர் எடுத்துக்கொடுப்பது போன்ற பல்வேறு வேலைகளைச் செய்துவருகின்றார்கள். நான் வறுமையினை நன்கு அனுபவித்தவன் என்றவகையில், வறுமையால் வாடுகின்றவர்களுக்குத் தொழில் வழங்கவேண்டும் என்ற சிந்தனையும் என்னிடம் இருக்கும் காரணத்தால், இந்த வேலையைச் செய்ய விரும்புபவர்களுக்குப் பயிற்சிகளை அளித்து வருகின்றேன். அவர்களுக்கு மாதம் 2000 ரூபா அளவில் வேதனம் வழங்குகின்றேன். பயிற்சியின்போது, வழங்கப்படும் இந்த வேதனம், பின்னர் அவர்களின் திறமைக்கு ஏற்ற வகையில் உயர்த்திக் கொடுப்பதாக அமைகின்றது. என்னிடம் பயிற்சிபெற்ற சிலர் - தற்போது எனக்குப் போட்டியாகக் கடை போட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களை போட்டியாளராக நான் கருதுவதில்லை. அவர்களைக் காணும்போது எனக்கு மகிழ்ச்சி உண்டாகும். அவர்கள் என்னிடம் பயிற்சி பெற்றவர்கள் என்பதால், எனக்கு அது மகிழ்ச்சியாக இருக்கிறது.

நான் போரூட் நிறுவனத்தினூடாகவும் ஓவயப்பயிற்சிகளை வழங்கிவருகின்றேன். ஒவ்வொரு பிரதேசங்களிலுமுள்ள வசதியற்ற ஓவியம் கற்க விரும்புபவர்களிடம் இந்த நிறுவனங்கள் ஊடாக விண்ணப்பங்களைப் பெற்று, ஓவியப் பயிற்சிகளை வழங்கிக்கொண்டும் வருகின்றேன்.

ஸ்கிறீன் பிறின்டிங் தொடர்பான வேலைகளில் நான் ஈடுபட்டு வருவதோடு, அது தொடர்பான பயிற்சிகளை வழங்குவதிலும் ஈடுபட்டு வருகின்றேன். இந்த ஸ்கிறீன் பிறின்டிங் வேலையில் பயிற்சி பெற்றவர்கள் தற்போது 150 இற்கும் மேற்பட்டவர்கள் உள்ளார்கள். எனது யசோ நிறுவனத்தின் பத்தாவது ஆண்டில் 100 பேருக்கு இலவசமாக இந்த ஸ்கிறீன் பிறின்டிங் பயிற்சிகளை வழங்கவுள்ளேன்.

**தற்போது உங்களுக்கு வரும் வேலைகளில் எந்தவகையான வேலைகள் கூடுதலாக வருகின்றன?**

ஸ்கிறீன் பிறின்டிங் வேலைகள், றபர் ஸ்ராம்ப் செய்கின்ற வேலைகள் என்றும், பல்வேறு வகையில் எனது வேலைகளும் கிளைவிட்டு ஓடிக்கொண்டு இருக்கின்றன. அந்த வகையில் என்னுடைய இந்த வேலைகளில், அதிகமாகத் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலை - றபர்ஸ்ராம்ப் செய்யும் வேலைதான். பல்வேறு வடிவங்களில் றபர் ஸ்ராம்ப்களைச் செய்து கொடுக்கிறேன்.

றபர்ஸ்ராம்பில் மை தொட்டொற்றும் தன்மையை விடுத்து, தொடர்ச்சியாக மை பாவிக்காது பயன்படுத்தும் றபர்ஸ்ராம்ப்களைச் செயது வருகிறேன். தற்போது சாதாரணமான பேனா வடிவிலான றபர்ஸ்ராம் ஒன்றினை வடிவமைத்துள்ளேன். இதன் ஒரு பக்கத்தினால் எழுதலாம், மற்றைய பக்கத்தினால் றபர்ஸ்ராம் போன்ற அமைப்பில் றபர் முத்திரையைப் பதித்துக் கொள்ளலாம்.

இலகுவில் எடுத்துச்செல்லக்கூடிய வகையில் விளங்கும் இந்த றபர்ஸ்ராம் பேனாவை- சமாதான நீதிவான்கள், அரச அதிகாரிகள் போன்றோர் தற்போது அதிகளவில் விரும்பி வாங்கிச் செல்கின்றார்கள். இந்த றபர்ஸ்ராம்ப்கள் 15 ஆயிரம் தொடக்கம் 20 ஆயிரம் தடவைகள் வரை மைவிடாது பயன்படுத்தக் கூடியவை.

சினிமா ஸ்லைட் செய்கின்ற வேலைகளிலும் நான் ஈடுபட்டு வருகின்றேன். தியேட்டர்களில் விளம்பரங்களில் போடப்படுகின்ற அனைத்து 'சினிமா ஸ்லைட்' களும் நான் செய்து கொடுத்தவையே. தற்போதுள்ள தியேட்டர்களில் பாவிக்கப்படும் சினிமா ஸ்லைட்களில் என்னுடைய நிறுவனப் பெயரைக் காணலாம்.

இப்படியான மக்கள் அதிகமாகக்கூடும் இடங்களில்தான், நான் எனது நிறுவனப் பெயரைப் போடுவேன். மற்றைய இடங்களில் பெயர்களைப் போட்டுக்கொள்வதில்லை. மக்கள்கூடும் இடங்களில் செய்யும் வேலைகளில் எனது பெயரைப் போடுவதன்மூலம், எல்லோரும் அறிந்துகொள்ளவேண்டும் என்பதற்காகவே போட்டுக்கொள்வேன்.

**உங்களுடைய வேலைகளுக்கான மூலப்பொருட்களை எங்கிருந்து பெற்றுக்கொள்கிறீர்கள்?**

ஸ்கிறீன் பிறின்டிங்கிற்குரிய மூலப்பொருட்களை எல்லாம் கொழும்பிலிருந்தே எடுக்கிறேன். இரசாயனப் பொருட்களை இங்கு எடுப்பது சிரமம் என்பதால், அவற்றை அங்கிருந்து எடுத்து வருகிறேன். ஏ-9 பாதை திறப்பதற்கு முன்னர், ஓவியனாக மட்டுமே இருந்தேன். பாதை திறந்தபின்னர், நான் கொழும்பிற்குச் சென்று, அங்கிருந்து பொருட்களை எடுத்து வருவதற்கு ஏதுவாக இருப்பதால், ஸ்கிறீன் பிறின்டிங் வேலைகளையும் செய்யக்கூடியதாகவுள்ளது.

**உங்களுடைய இந்த தொழில் முயற்சிக்கு உந்துசக்தியாக இருந்தவர்கள் பற்றிக் கூறுவீர்களா?**

என்னுடைய இந்தத் தொழிலை ஆரம்பிப்பதற்குப் பல்வேறு வகையான உதவிகளைப் புரிந்தவர்கள் என்றவகையில், என்னுடைய மாமியாகிய புஸ்பரத்தினத்தைக் குறிப்பிடலாம்.

அவர் எனக்குப் பல வழிகளிலும் உதவி புரிந்தவர். கடன் வாங்கியே முதலில் தொழிலை ஆரம்பித்தேன். வங்கிகள் எம்போன்ற தொழிலில் ஈடுபடுபவர்களுக்குக் கடன் வழங்குவதில் சிரத்தைக் காட்டுவதில்லை. தொடர்ச்சியாக ஒரு தொழிலை மேம்படுத்துவதற்கான கடன்களை வங்கிகள் வழங்குவது இல்லையென்பது அனைவரது முறைப்பாடாகவுமே உள்ளது. வங்கிகள் புதிதாகத் தொழில் தொடங்குபவர்களுக்கு மட்டுமே கடன்


சி.யசோதரன்

வழங்குகின்றது. தொடர்ச்சியாக நடைபெறும் ஒரு தொழிலை முன்னேற்றுவதற்கு கடன் வழங்குவதில்லை. அப்படி வங்கிகள் கடன் வழங்குமாக இருந்தால், பெரியதொரு தொழில் நிறுவனமாக யசோ நிறுவனம் வளரும் என்றுதான் நான் கூறுவேன்.

நான் ஓவியராகக் கடமையாற்றுகின்ற அதேவேளை, யாழ். இந்துக் கல்லூரியில் சித்திரபாட ஆசிரியராகவும் இருக்கின்றேன். கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலும் பயிற்சியை முடித்துக்கொண்டுள்ளேன். பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் இங்கேயே நிற்பேன். அந்த வகையில் பெருமளவு எனது முயற்சிதான் இந்தத் தொழில் நிறுவனம் என்று கூறலாம்.

**உங்களைப் போன்ற தொழில் ஆர்வம் உள்ளவர்களுக்கு நீங்கள் கூறவிரும்புவது என்ன?**

ஓவியம் என்பது ஒரு சாதாரணமான தொழில் என்றே அனைவரும் கருதுகிறார்கள். நான் அவ்வாறு கருதுவதில்லை. ஓவியர் என்றவகையில் இவ்வாறு ஒரு கடையைப் போட்டு, இந்தளவுதூரம் வளர்வது கடினம். சிலர் ஓவியர் என்று மட்டும் இருப்பார்கள். வீடுகளில் வைத்து ஓவியங்களை வரைவார்கள். அப்போது அவர்களை அநேகம் அறிந்தவர்கள்தான் படங்களைக் கீறுவதற்காகப் போவார்கள். அவர்களிடம் பணம் வாங்கிக்கொண்டு, படம் கீறிக் கொடுப்பதற்கு மனம் கூச்சமாக இருக்கும்.

அவர்கள் கடை ஒன்றை வைத்துக் கொண்டார்கள் என்றால், அங்கு வருவோருக்கு அதற்குரிய நடைமுறையில் வேலைகளைச் செய்யமுடியும். அதனால், வாழ்க்கையை உயர்த்தமுடியும். ஓவியம் என்பது ஒரு பிறவிக்கலை என்பதை நான் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. ஒருவனிடம் திறமையும், முயற்சியும் இருக்குமானால், அவன் எந்தத் தொழிலையும் திறமையாகச் செய்கின்ற ஆற்றல் உடையவனாக இருப்பான். கலையில் பிறவிக் கலை என்று ஒன்று இல்லை.

எந்தத் தொழிலையும் எவருமே செய்யலாம் என்பதே எனது சித்தாந்தமாகும்.

ஓவியம் வரைவது என்பது ஆத்மார்த்தமானது என்று கூறுவதை நான் நம்பவில்லை. அவ்வாறு கூறிக்கொண்டு திரிபவர்களைத் தற்பெருமை வாய்ந்தவர்களாகத்தான் நான் கருதுகிறேன். திறமையைப் பயன்படுத்தாமல் ஆத்மார்த்தம் என்று கூறிக்கொண்டு திரியும் ஓவியர்களை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

என்னால் எதையும் சாதிக்கமுடியும் என்ற திடமான நம்பிக்கை இருந்தால், எந்தத் தொழிலிலும் உயர்ந்தநிலையில் வரலாம்.

ஓவியனாக வரவிரும்பும் எவருக்கும் உதவிபுரிவதற்கு நான் தயாராக உள்ளேன். அவர்கள் தன்னம்பிக்கையோடு முன்வரவேண்டும்.

ஒருசிலதை எல்லோருக்கும் சொல்லிக் கொடுக்கக்கூடாது என்ற கருத்து என்னிடம் இல்லை. யாரும் என்னிடம் வந்து ஓவியப் பயிற்சி பெறுவதற்கு வழிசெய்ய நான் தயாராகவே உள்ளேன்.

இவ்வாறு ஓவியம்மூலம், வளர்ந்த யசோதரன் அவர்கள் - மற்றோரையும் வளர்க்க முன்வந்ததையிட்டு மனமகிழ்வுடன் எமது செவ்வியை நிறைவு செய்தோம்.

> *ஓவியம் வரைவது என்பது ஆத்மார்த்தமானது என்று கூறுவதை நான் நம்பவில்லை. அவ்வாறு கூறிக்கொண்டு திரிபவர்களைத் தற்பெருமை வாய்ந்தவர்களாகத்தான் நான் கருதுகிறேன். திறமையைப் பயன்படுத்தாமல் ஆத்மார்த்தம் என்று கூறிக்கொண்டு திரியும் ஓவியர்களை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.*
>
> *என்னால் எதையும் சாதிக்கமுடியும் என்ற திடமான நம்பிக்கை இருந்தால், எந்தத் தொழிலிலும் உயர்ந்த நிலைக்கு வரலாம்.*

நேர்காணல் - பூ.நகுலன்

# வெற்றிலையை பாதிக்கும் வாடல் நோய்

யாழ்ப்பாணப் பகுதியில் வெற்றிலைச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் அதிகமாகக் காணப்படுகிறார்கள். வெற்றிலைத் தோட்டங்கள் பெரும்பாலும், நீர் தேங்காத இடங்களில் அமைக்கப்படுவது முக்கியமானதாகும். வெற்றிலை ஒரு மருத்துவ மூலிகைப்பொருளாகக் காணப்படுவதுடன், இதைச் சாதாரணமாக பாக்குடன் கலந்து, சுண்ணாம்பு தடவி போட்டுக்கொள்கிறார்கள்.



இந்த வெற்றிலைத் தோட்டங்கள் - வாடல் நோயினால் தாக்கப்பட்டுப் பெரும் சேதமடைகின்றன. இந்த வாடல் நோயானது வெற்றிலைக் கொடியை 6 அல்லது 8 ஆவது மாதத் திலிருந்து தாக்கத்தொடங்கும்.

இந்த நோய் பருவமழைக் காலங்களிலேயே அதிகளவில் தோன்றிப் பரவும். இந்த நோயினால் தாக்கப்பட்ட வெற்றிலைக் கொடிகளில் வளர்ச்சி திடீரெனத் தடைப்படும். இலைகளின் மேல் காணப்படும் பளபளப்புத் தன்மை மங்கிக்கொண்டு செல்லும். இந்த அறிகுறிகள் ஏற்படத் தொடங்கிய 2 தொடக்கம் 3 நாட்களுக்குள், இலைகள் துவண்டுபோய்விடும். நாளடைவில் இந்த நோய் ஏற்பட்ட வெற்றிலைக் கொடிகளும் காய்ந்துபோய்விடும். அப்படியே தொடர்ச்சியாகத் தோட்டத்திலுள்ள அனைத்து வெற்றிலைக் கொடிகளும் பாகம் பாகமாகக் காய்ந்துகொண்டு செல்லும்.

இந்த வாடல் நோயினால் தாக்கப்பட்ட வெற்றிலைக் கொடிகளின் தண்டுகளும் நிறம் மாறிக் காணப்படும். அத்தோடு, வேர்ப் பாகம் அழுகியும் காணப்படும்.

கோடைகாலம் நெருங்கும் தருணத்தில் இந்த நோயின் வேகமும், தாக்கமும் படிப்படியாகக் குறைந்துகொண்டு சென்றுவிடும்.

**வாடல் நோயினைத் தடுக்கும் முறைகள்**

இந்த நோயானது ஒவ்வொரு ஆண்டும் வெற்றிலைத் தோட்டங்களிலே தோன்றும். இதற்குக் காரணம் - முதலிலிருந்த வெற்றிலைக் கொடிகளில் தொற்றிய நோய் - முற்று முழுதானநிலையில் அழிக்கப்படாமையே ஆகும்.

அதாவது, பூரணமானமுறையில் இந்த வாடல் நோயினை ஏற்படுத்தும் பூஞ்சணத்தினை அழிக்காது விடுவதனால், அது தொடர்ந்தும் அந்த நிலத்தில் பதிந்திருந்து, தொடர்ச்சியாகத் தாக்கத்தினை உண்டு பண்ணுகிறது.

எனவே, பருவமழை ஆரம்பமாகும் முன்னர், இந்தநோயினை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவேண்டும்.

இதற்குப் பூஞ்சணக்கொல்லி மருந்தினை, வெற்றிலைக் கொடிகளின் வேர்ப்பாகத்துக்கு நன்கு படியும்படி தெளிக்கவேண்டும். இவ்வாறு வேர்ப்பாகத்தினைச் சுற்றித் தெளிப்பதால், மண்ணில் வசித்துவரும் பூஞ்சணக்கிருமிகள் முற்றாகக் கொல்லப்படும். இந்த மருந்தினை மழைகாலம் முடியும்வரை தொடர்ந்து மாதம் ஒருமுறை பயன்படுத்துவதன்மூலம் ஓரளவு கட்டுப்படுத்தலாம்.

அத்தோடு, நோயினால் தாக்கப்பட்ட வெற்றிலைக் கொடிகளை உடனே அகற்றி, தீயிட்டு எரித்து விடுதல் மிகவும் நல்லது.

இதைவிட, நோய்தாக்கிய வெற்றிலைக் கொடிகளை நடைபாதையிலோ அல்லது வேலியோரத்திலோ எறிந்துவிடுதல்கூடாது. அப்படி கவனமற்றமுறையில் எறிந்து விடுவதன்மூலம், அந்த நோய் தொற்றிய வெற்றிலைக் கொடிகளிலுள்ள நோய்- தண்ணீர் மூலமும், ஏனைய புறக்காரணிகள் மூலமும் மீண்டும் தோட்டத்திலுள்ள ஏனைய ஆரோக்கியமான கொடிகளுக்கும் தொற்றக் கூடும்.

ஆகவே, இந்த நடைமுறைகளில் மிகவும் கவனமாக இருப்பதன்மூலம், தொடர்ச்சியான நோய்த் தொற்றினைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

எனவே, ஆயுர்வேத மருந்து மூலிகையாக- பல்வேறுபட்ட நோய்களிலிருந்து, சிறுவர்கள் முதல் பெரியவர்கள்வரை அனைவரையும் காக்கும் வெற்றிலைக் கொடியானது - ஒரு முக்கியயமான பயிராக இருப்பது அனைவரும் அறிந்ததே.

எனவே, வருமானத்தையும், பல நன்மைகளையும் தரும் இந்தப் பயிரினை, பருவகாலங்களில் ஏற்படும் நோயிலிருந்து முன்கூட்டியே காப்போம்.

இரா.காயத்திரி

## கோழிகளின் நோய்களும் தடுக்கும் முறைகளும்

கோழி வளர்ப்பு இலங்கையில் மிகவும் பிரபல்யம் அடைந்துள்ள ஒரு பண்ணைத் தொழிலாகும். பலர் கோழி வளர்ப்பைத் தமது தனித்தொழிலாக மேற்கொண்டு உள்ளனர். பலர் கோழி வளர்ப்பைத் தங்களின் குடும்பவருமானத்தைக் கூட்டும் ஒரு பக்கத் தொழிலாக மேற்கொண்டுவருகின்றனர்.

கோழிகளைச் சரியானமுறையில் வளர்க்காவிட்டால், பலவகையான நோய்கள் அவைகளைத் தாக்கி, கோழிகளை இறக்கச் செய்யும் அல்லது உற்பத்தியைக் குறைத்து, கோழிப்பண்ணையாளருக்கு அதிக நட்டத்தை ஏற்படுத்தும். கோழிகளில் ஏற்படும் முக்கியநோய்களைத் தடுப்பதற்குப் பண்ணையாளர்கள் அறிந்திருக்கவேண்டியது மிகவும் அவசியம்.

கோழிகளில் ஏற்படும் முக்கிய நோய்களில் மிகமுக்கியமானது வைரஸ் என்னும் நுண்கிருமியால் ஏற்படும் நோய்களாகும்.

**வைரஸால் ஏற்படும் நோய்கள்.**

**1. றணகட் நோய்**

இந்தநோய் எல்லா வயதுக்கோழிகளையும் தாக்கும். இந்த நோய் ஏற்பட்டால் - கோழிகள் பச்சை, வெள்ளை நிறமாக மலம் கழித்து, 2 நாட்களில் இறந்துவிடும். ஒரு பண்ணையில் ஒரு கூட்டிற்குள் இந்த நோய் ஏற்பட்டால், 75% மான கோழிகள் இறந்துவிடும். இறந்த கோழிகளை வெட்டிப்பார்த்தல், இரைப்பையின் மேலேயுள்ள புறோர் வெனடிற் குழாய் மற்றும் மலவாசலிலும் இரத்தக் கசிவுகள் காணப்படும். இந்த நோய் கோழிகளுக்கு வந்தால், எந்த மருந்தும் கொடுத்து நோயை மாற்றமுடியாது. ஆகவே, எல்லாக் கோழிகளுக்கும் குஞ்சிலிருநது நோய்த் தடுப்பு மருந்தைக் கொடுக்க வேண்டும்.

தடுப்பு மருந்து 21 ஆம் நாள், 6 மாதம், 9 மாதத்தில் கொடுக்கவேண்டும்.

**2. கம்போறா**

இந்த நோயும் வைரஸ் கிருமியால் ஏற்படுகின்றது. குஞ்சு பருவத்திலேயே இந்த நோயின் தாக்கம் ஏற்படுகின்றது. இந்த நோய் ஏற்பட்டால், 50% தொடக்கம் 75% கோழிக்குஞ்சுகள் இறக்கநேரிடும். வைரஸ் நோய் என்பதால், நோய் வந்த பின் மருந்துகள் கொடுத்து காப்பாற்றுவது கடினம்.

**நோயின் அறிகுறிகள்:** குஞ்சுகள் ஒடுங்கிப்போய், உணவருந்தாமல் வெள்ளை, மஞ்சள் நுரைத்த மலத்தைக் கழிக்கும். ஒவ்வொருநாளும் 10-20% இறப்பு ஏற்படும். இறந்த குஞ்சுகளை மரணபரிசோதனை செய்து பார்த்தால் - கால் தொடை தசைகளில், மார்பு தசைகளில் இரத்த கசிவு அடையாளம் காணப்படும். உட்பகுதியில் மலவாசலுடன் அண்டியுள்ள பேசா என்னும் பையில் வீக்கம், இரத்தக் கசிவு காணப்படும். புறோவென்றிக்குலசிலும் இரதத்க் கசிவுகள் காணப்படும்.

(தொடரும்...)

Dr.M.தங்கராஜா B.V.Sc.mse (SL)
அத்தியட்சகர், கால்நடை வைத்தியசாலை
யாழ்ப்பாணம்

## வாரம் ஒரு சிறுதொழில்

### காகிதக்கூழ் மூலம் கூடை செய்யும் முறை



காகிதக்கூழ்மூலம் பலவிதமான பொருட்களைச்செய்து விற்பனை செய்யலாம். அந்தவகையில்-

நாம் கழிவாகக் கருதும் பேப்பர்களைச் சேகரித்து, (நிறப்பேப்பர் தவிர) வெள்ளைப் பேப்பர்களையும் அச்சடிக்கப்பட்ட பேப்பர்களை வேறாகவும் சேகரித்து, அவற்றில் வேறு எந்தப் பொருட்களும் கலக்காதவாறு எடுத்துக்கொள்ளவேண்டும். பின் காகிதங்களை சமதளம் ஒன்றில் பரப்பி, ஒரு தடியைக்கொண்டு பலமுறை அடித்தபின் அவற்றை நன்றாக உதறி வாயகன்ற பெரிய சிமெந்துத் தொட்டியில் போட்டபின்னர் - ஒருகிலோ பேப்பருக்கு 20 கிராம் கோஸ்டிக் சோடாவை வேறொரு பாத்திரத்தில் போட்டு, தேவையாள அளவு நீர் விட்டு, ஒரு தடியால் கரைக்க வேண்டும். கோஸ்டிக் சோடா கரைந்து நீர் சூடேறும். அதன் சூடு தணிந்தபின்னர் தொட்டியிலுள்ள பேப்பர்மேல் ஊற்றி நன்றாகக் கிளறவேண்டும். மேலும் தண்ணீர் விட்டு நன்றாகக்கலக்கிவிட்டு ஒரு பலகையால் சிமெந்துத் தொட்டியை மூடிவிடவேண்டும்.

24 மணிநேரம் ஊறிய பின் அந்தப் பேப்பர்களை அள்ளியெடுத்து ஒரு மட்டமான சிமெந்துத்தரையில் போட்டு, ஓயாது கனமான தடியைக் கொண்டு நன்றாக அடிக்கவேண்டும். இந்தச் சமயம் பேப்பர் (காகிதம்) மட்டமாகப் பதிந்து கொள்ளும். அதைக் குவியலாக்கி மீண்டும் அடிக்கவேண்டும். பின்னர் ஒரு கூடையில் அள்ளி அதிலுள்ள நீரை வடியவிடவேண்டும். இப்போது காகிதம் நைந்து, பிய்ந்து கூழ்போல ஆகிவிடும். இப்படிக் கூழ்போலான காகிதம் புல்ப் ( PULP) காகிதக் கூழ் என்று அழைக்கப்படும்.

தயார் செய்யப்பட்ட காகிதக்கூழ்மூலம் எப்படிக் கூடைகள் செய்வது?

எந்தளவில் நாம் கூடைகள் செய்யநினைக்கின்றோமோ, அந்தளவில் ஒரு மாதிரிப் பாத்திரத்தை எடுத்துக்கொள்ளவேண்டும். அந்தப் பாத்திரத்தில் விளக்கெண்ணெய் தடவப்படவேண்டும். பின்னர் எந்தளவு தேவையோ அந்த அளவிற்குக் காகிதக்கூழை சமமான கனத்துடன் பூசிவிடவேண்டும். பின்பு - அந்தப் பாத்திரத்தை வெய்யிலில் காயவைக்கவேண்டும். பூசப்பட்டிருக்கும் காகிதக்கூழ் இரண்டொரு நாட்கள் காய்ந்து, கெட்டியானவுடன் தட்டையான கத்திபோன்ற சாதனங்கள்மூலம் - கூடையின் முனையை ஒழுங்காக வெட்டிவிடவேண்டும். அதேசமயத்தில் காகிதக் கூடையின் முனையில் சற்றுக் கெட்டியான காகிதக்கூழை ஒட்டவைத்து, விதவிதமாகவும் அழகுபடுத்தலாம். கூடையின் மேற்புறம் நன்றாகக் காய்ந்து பாத்திரத்திலிருந்து பிரித்தெடுக்கும் பக்குவமாகும்வரை காயவைக்க வேண்டும். பின்பு கூடையைத் தனியாகப் பிரித்தெடுத்து, உட்புறம் நன்றாக்கக்காயுமாறு வெய்யிலில் வைக்கவேண்டும். கூடை காய்ந்துவரும்போது, அதன் மீது சிறிதளவு நீர் தெளித்து, தட்டையான கரண்டியினால் கூடையின் மேற்புறத்தை நன்றாகத் தேய்த்துவிடவேண்டும். அவ்வாறு தேய்க்கும்போது, சில விடயங்களைக் கவனத்தில் கொள்ளவேண்டும். அழுத்தமாகத் தேய்க்காது மென்மையாகத் தேக்கவேண்டும். பின்னர் அதன் மீது வண்ணக்காகிதங்களை ஒட்டி அழகுபடுத்தலாம். அல்லது நல்ல கவர்ச்சியான எண்ணெய் வர்ணங்களைப் பூசி அழகுபடுத்தலாம்.

*(அடுத்தவாரம் பொம்மை செய்யும் முறைபற்றிப் பார்ப்போம்).*

## குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | நெல்லியடி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | திருநெல்வேலி | சங்கானை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 100/= | 100/= | 140/= | 110/= | 120/= | 100/= | 100/= |
| வெண்டிக்காய் | 20/= | 40/= | 40/= | 40/= | 40/= | 20/= | 60/= |
| உருளைக்கிழங்கு | 80/= | 100/= | 75/= | 80/= | 85/= | 80/= | 80/= |
| கத்தரிக்காய் | 100/= | 100/= | 100/= | 100/= | 130/= | 120/= | 100/= |
| பாகற்காய் | 90/= | 60/= | 120/= | 90/= | 120/= | 100/= | - |
| கரட் | 50/= | 60/= | 60/= | 60/= | 80/= | 80/= | 60/= |
| பீற்றூட் | 60/= | 50/= | 65/= | 40/= | 40/= | 40/= | 40/= |
| முருங்கைக்காய் | - | 100/= | - | - | - | 120/= | - |
| வெங்காயம் | 45/= | 60/= | 50/= | 40/= | 45/= | 40/= | 50/= |
| பச்சை மிளகாய் | 120/= | 100/= | 100/= | 140/= | 100/= | 140/= | 80/= |

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*வினைக்குரிமை வினையுடையான் கேண்மைவே றாக
நினைப்பானை நீங்கும் திரு*

-திருக்குறள்.

## நமது நோக்கு

### தமிழருக்கு சமாதானம் வழங்கும் பரிசுகள்

நேற்றுமுன்தினம் மாலை யாழ். பஸ்நிலையப் பகுதியில் வைத்து தன் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைதீர பத்திரிகைகளை விற்று பிழைப்பு நடாத்திவரும் வெறும் பதினாறே வயதான வறிய குடும்பத்துச் சிறுவன் ஒருவன்மீது, சிப்பாய் ஒருவரின் சிறுமைத்தனம் துப்பாக்கியின் ஊடாக சீறிப்பாய முனைந்தபோது, ஒரு அப்பாவி மினிபஸ் நடத்துநர் ஒருவர் படுகாயங்களுக்குள்ளானதுடன் அந்தச் சிறுவனும் காயங்களுக்குள்ளாகி சிகிச்சைக்கென மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வழமைபோல் குற்றம் இழைத்த சிங்களச் சிப்பாயைப் பாதுகாப்பதற்கு படைத்தரப்பு தமது சம்பிரதாயபூர்வ நடவடிக்கைகளை உடனடியாகவே மேற்கொண்டது என்பது முக்கியமாகக் கருத்தில் கொள்ளவேண்டிய விடயமாகும்.

அதாவது, பொதுமக்கள் நெரிசலான வகையில் நடமாடும் யாழ். நகரத்தின் இதயம் போன்ற பஸ்நிலையப் பகுதியில், அதுவும் மக்களின் போக்குவரத்து மிகஅதிகமாக உள்ள மாலை நேரத்தில், விவேகமற்ற முறையில் கண்மூடித்தனமான ஒரு பதினாறு வயதுச் சிறுவனை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட அந்தச் சிப்பாயையும் அவருடன்கூட நின்றவர்களையும் பாதுகாக்க பொலிஸ் உட்படப் படைத்தரப்பினர் மேற்கொண்ட நடவடிக்கைகள் - சில வாரங்களின் முன்னர் பொதுமக்கள் சிலரை தமது இராணுவ வாகனங்களால் மோதி அடுத்தடுத்து கொன்றும், காயப்படுத்தியும் கொடூரம் புரிந்த படையினரை காப்பாற்ற மேற்கொண்ட செயற்பாடுகளுக்கு நிகராகவே இருந்தன.

சிறுவன் விற்பனை செய்துகொண்டிருந்த பத்திரிகையில் விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் படம் அச்சிடப்பட்டிருந்ததால் அவனை விசாரணை செய்ய அப்பகுதியில் கடமையில் நின்ற மூன்று சிங்களச் சிப்பாய்கள் முயன்று பஸ்நிலையத்தின் தென்கிழக்கு மூலைப்பக்கம் கூட்டிச் சென்று துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது, கையில் காயமடைந்த சிறுவன் இராணுவப் பிடியில் இருந்து விலகி ஓடியபோது, அப்பகுதியில் நின்ற மினிபஸ் நடத்துநர் ஒருவர் மீது சிப்பாயின் துப்பாக்கி ரவையை செலுத்த, அவரும் வயிற்றுப் பகுதியில் அபாயகரமான முறையில் காயங்களுக்குள்ளாகியுள்ளார்.

பிரபாகரனின் படம் ஒரு பத்திரிகையில் அச்சிடப்பட்டிருந்தால், அப்பத்திரிகையை விற்பவரையோ அல்லது வைத்திருப்பவரையோ சந்தேகத்துடன் பாருங்கள் - விசாரியுங்கள் - கைது செய்யுங்கள் அல்லது சுடுங்கள் என சமாதானத்தின் பேரிலான புரிந்துணர்வு உடன்பாட்டின் விதிமுறைகள் ஏதாவது இராணுவத்தினரை அறிவுறுத்தியுள்ளதா?

அப்படியானால், இன்று குடாநாட்டில் வெளியாகும் பத்திரிகைகள், சஞ்சிகைகளை விடவும் - தென்பகுதியில் அதுவும் சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் வெளியாகும் பத்திரிகைளும், சஞ்சிகைகளும்தான் அதிக அளவில் அவரைப் பற்றி எழுதுகின்றன, அழகழகான படங்களை பிரசுரிக்கின்றன, சிங்கள மக்கள் மத்தியில் பெருமளவில் விற்பனை செய்கின்றன. அப்பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஆகியவற்றை வெளியிடுவோரை, விற்பனை செய்வோரை, வாங்குவோரை இந்தப் படைத்தரப்பினர் என்றாவது விசாரணை செய்துள்ளார்களா?

அதற்கான துணிச்சலோ அல்லது சட்ட விதிகளோ அவர்களிடம் உள்ளதா?

தமிழர்கள் என்றால் அவர்கள்மீது எந்த நடவடிக்கையையும் இராணுவத்தினர் சுயாதீனமாகவே மேற்கொள்ளலாம். அதிகாரிகளோ, அரசோ அல்லது வேறு எவருமோ அவர்களைத் தட்டிக்கேட்க மாட்டார்கள் என்ற அகங்காரம் அவர்களுக்கு.

என்ன குற்றத்தைச் செய்தாலும் அதிகாரிகள் சம்பிரதாயத்திற்காக அவர்களைக் கைதுசெய்தாலும், விசாரணை செய்தாலும் தண்டனை என எதனையும் உடனடியாகத் தரமாட்டார்கள் என்பதில் அவர்களுக்கு நம்பிக்கை அதிகம்.

கடந்தகால நிகழ்வுகள் அனைத்தும் அவர்களுக்கு அதற்கான உறுதியை மறைமுகமாக வழங்கியுள்ளன போலும்.

இராணுவத்தினரின் அடாவடித்தனங்களைத் தட்டிக்கேட்க அல்லது எதிர்க்கத் துணியும் மக்கள்மீது தடியடிப் பிரயோகம் செய்யவும், கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசவும், துப்பாக்கிப் பிரயோகம் செய்து அச்சுறுத்தலை மேற்கொள்ளவும் மட்டும் பொலிஸ்தரப்பும், படைத்தரப்பும் ஆர்வமும் அக்கறையும் கொண்டு வேகமாகச் செயற்படுவதுதான் சிறிலங்காவில் தமிழ்மக்களுக்கான பாதுகாப்பு உத்தரவாதத்தின் நிலையாகும்.

ஒன்றரை ஆண்டுகால சமாதானம் - தமிழ்மக்களுக்கு சிறிலங்கா அரசினூடாக பெற்றுத்தந்த நன்மை இது மட்டுமேயாகும்.

ஒரு பிரஜை தனக்குப் பிடித்தமான ஒரு தலைவரை நேசிப்பதும், அவரது புகைப்படத்தையோ அவர் தொடர்பான புத்தகம், பத்திரிகை அல்லது சஞ்சிகையை வைத்திருப்பதும் தண்டனைக்குரிய - அதுவும் இராணுவச் சிப்பாயால் மரண தண்டனை வழங்குவதற்குரிய குற்றமென தெருவோரத்தில் பாதுகாப்புக் கடமையில் நிற்கும் சிப்பாயே தீர்மானிக்க முடியுமானால் அந்த நாட்டில் எத்தகைய ஜனநாயகம் - அதுவும் சமாதான காலத்தில் - நிலவுகின்றதென்பதை சர்வதேச சமூகமும் சமாதான ஆர்வலர்களும் அழுத்தமாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

வவுனியாவில் தனது கடமைப்பொறுப்புக்களை முடித்துக்கொண்டு விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களைச் சந்தித்து விடைபெற்று, பரிசினையும் பெற்றுக் சமாதானத்தின் அவசியத்தை வலுயுறுத்திவிட்டு, யாழ்.குடாவின் தளபதியாக புதிய பொறுப்பை ஏற்கவந்துள்ள மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால தனது கடமைகளை ஏற்பதற்கு முதல்தினமே இப்படியொரு அனர்த்தமான சம்பவத்துடன் கூடிய வரவேற்பினை தனது சிப்பாய்களே தருவார்கள் என நினைத்திருக்கமாட்டார்.

குடாநாட்டில் அவர் வலியுறுத்தும் சமாதானத்தின் நிலை எந்த அளவில் உள்ளதென்பதை இந்தச் சம்பவம் அவருக்கு உணர்த்துமா? அவர் அதை உணர்வாரா?

## நாடும் நடப்பும்




## எந்தவிதமான எதிர்ப்புமின்றி நிறைவேறிய நுகர்வோர் வர்த்தக குழுநிலை விவாதங்கள்

(கொழும்பு)

தேசிய சுற்றாடல் பாதுகாப்புச் சட்டம், நுகர்வோர், வர்த்தகத்துறை ஆகியவற்றின் குழுநிலை விவாதங்கள் நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்றன.

இந்த இரண்டு அமைச்சர்களின் குழுநிலை விவாதங்களும் எந்தவித எதிர்ப்புக்களுமின்றி நிறைவேற்றப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் இறக்குமதி, ஏற்றுமதித் துறையில் சுங்க அதிகாரிகள் - இலத்திரனியல் பாதுகாப்பு தன்னியக்க கருவிகளைக்கொண்டு கடமையாற்றவுள்ளதாக, நுகர்வோர் வர்த்தகத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்தக் கருவி நவீனமயப்படுத்தப்பட்டதாகவும், தற்போது வெளிநாடுகளில் பாவனையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்தக் கருவியின் பயன்பாடு 10 வருடங்களின் பின்னர்தான் இலங்கைக்கு வரவிருந்தது என்றும், தற்போது இது இலங்கைக்குக் கொண்டுவரப்படவுள்ளது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கையில் இருந்து சட்டவிரோதமாகச் செல்லும் பொருட்கள் மற்றும் இலங்கைக்கு வரும் பொருட்கள் என்பவற்றை இந்தக் கருவிகளின்மூலம் கண்டுபிடிக்கமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சதொச நிறுவனங்கள் 24 மணிநேரம் திறந்துவைக்கப்பட்டபோதும், பெரும்பாலான சதொச நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளதாகவும், இவற்றிற்கு அமைச்சின் உரிய முகாமைத்துவம் இன்மையே காரணமென்றும், பொதுஜன ஐக்கிய முன்னனியின் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

அத்துடன், சலுசல நிறுவனங்கள்கூட தனியார் நிறுவனத்திற்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த 2000 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மட்டும், சுமார் இரண்டாயிரம் ஊழியர்கள் பணியில் இருந்து நிறுத்தப்பட்டுள்ளார்கள் என்றும், இதற்கு காரணம் சதொச நிறுவனம் நட்டம் அடைகின்றது என்றும் கூறப்பட்டது. ஆனால், இதற்குரிய உண்மைக்காரணம் - அரசாங்கத்திற்குச் சார்பான பலர் இந் நிறுவனத்தில் சேர்க்கப்பட்டமையே என்றும் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

## களவாக மணல் ஏற்றிய வாகனத்தை காரைநகரில் மக்கள் மடக்கிப் பிடிப்பு

காரைநகரிலிருந்து இரவுநேரம் களவாக மண்ணை ஏற்றிச் சென்ற இரு லொறிகள், அப்பகுதி மக்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டன.

நேற்றுமுன்தினம் காரைநகருக்குள் நுழைந்த இரு வெற்று லொறிகள்- இரவுவேளை மண் ஏற்றி, மறைவான ஓர் இடத்தில் நிறுத்தப்பட்டது. இதனை அவதானித்த அப்பகுதி மக்கள், அவர்களிடம் மண் ஏற்றுவதற்கான அனுமதிப்பத்திரத்தைக் கேட்டனர். எனினும், அவர்களிடம் அனுமதிப்பத்திரம் இல்லாததை உறுதிசெய்த மக்கள், இரு வாகனங்களையும் காரைநகர்ப் பிரதேசசெயலகத்தில் ஒப்படைத்துள்ளனர்.

காரைநகர்ப் பகுதியிலிருந்து அடிக்கடி மண், மரம் போன்றவை கடத்திச்செல்லப்படுகின்றன. இது தொடர்பாகச் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரியப்படுத்தியபோதும், எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

இதேவேளை, சட்டவிரோதமான மண் ஏற்றுதல், மரங்கள் கடத்தல் போன்ற செயற்பாடுகளுக்கு - அங்குள்ள முக்கியஸ்தர்களும், முகவர்களுமே காரணமாகவுள்ளனர் எனப் பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (52)

## கலைஞர்களின் ஆற்றல்களை வளர்க்க சலன சித்திரம் அமைப்பு முயற்சி

(யாழ்ப்பாணம்)

உள்ளூர் கலைஞர்களின் கலைப்படைப்பாற்றல்களைச் சர்வதேசரீதியாக வெளிக்கொண்டுவரும் முயற்சியாக, உள்ளூர் கலைஞர்களை ஒன்றுபடுத்தி, அதன்மூலம் மேலும் கலையை வளர்த்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளை திரைக்கலைச் சங்கங்களின் சம்மேளனமான 'சலனசித்திரம்' அமைப்பு மேற்கொண்டுவருகின்றது.

விவரணம் மற்றும் கதைத் திரைப்படங்களைக் குறும்படமாகவோ, முழுநீளப் படமாகவோ வைத்திருப்பவர்கள் அல்லது தயாரிக்க விரும்புவர்களும், தரமான இசைப்பாடல்களை ஒலிப்பதிவு செய்து வைத்திருப்பவர்கள் அல்லது ஒலிப்பதிவு செய்ய விரும்புபவர்களும் 'சலனசித்திரம்' அமைப்புடன் தொடர்புகொள்ளலாம்.

இதேவேளை, சலனசித்திரம் அமைப்பினால் திரைக்கலைத் தகவல்கள் அடங்கிய இலவச மாத இதழ், எதிர்வரும் ஜனவரி மாதத்திலிருந்து வெளிவர இருக்கிறது. இந்த இதழுக்கான திரைக்கதை சார்ந்த ஆக்கங்கள், கருத்துகள் மற்றும் வினாக்களை ஆர்வமுள்ளோர் எழுதி அனுப்பலாம். இதற்கு 'சலன சித்திரம்' கொடிகாமம் வீதி, கரவெட்டி எனும் முகவரியுடன் தொடர்புகொள்ளலாம்.

## சமாதானத்தைப் பாதுகாப்பது தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பொன்று நாளை கொழும்பில் நடைபெறும்

'தற்போதைய அரசியல் நிலைமைகளில் சமாதானத்தைப் பாதுகாப்பதில் ஊடகவியலாளர்களின் பங்கு' என்ற தொனிப்பொருளில், ஊடகவியலாளர்களுக்கான சந்திப்பு ஒன்று நடைபெறவுள்ளது.

நாளை காலை 9 மணி முதல் 3 மணிவரை இந்தக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

தேசிய சமாதானப் பேரவையும், வடக்கு - தெற்கு ஊடகவியலாளர் சங்கமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்தக் கருத்தரங்கு - கொழும்பு 7 இல் இருக்கும் சவுசிறிபாய விஜயராம வீதியில் இருக்கும் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

'ஊடகங்கள் பக்கசார்புடன் செயற்படுகின்றனவா' என்ற தலைப்பில் - உயர்பட்டப்படிப்புகளின் பீடாதிபதி சிற்றம்பலமும், தேசிய சமாதான பேரவையின் கலாநிதி ஜொகான் பெரேராவும், சுதந்திர ஊடகவியலாளர்கள் தரப்பில் சுனந்த தேசப்பிரியவும் உரையாற்றவுள்ளனர்.

இரண்டாவது அமர்வில் - 'தற்போதைய அரசியல் நெகிழ்ச்சியும் ஊடகங்களின் பங்கும்' என்ற தொனிப்பொருளில் கலாநிதி குமார் ரூபசிங்க, கலாநிதி ஜெயதேவ உயன்கொட ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

மூன்றாவது அமர்வில் - 'ஊடகங்களைப் பலப்படுத்துதல்' என்ற தலைப்பில் மாற்றுக்கொள்கைகளுக்கான இயக்கத்தின் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்துவும், தினக்குரல் சார்பில் சிவனேசசெல்வனும் உரையாற்றவுள்ளனர்.

இறுதி அமர்வில் - 'சிவில் சமூகமும் ஊடக ஒத்துழைப்புக்கான செயற்திட்டமும்' என்ற தலைப்பில் உரைகள் இடம் பெறும் என்றும் தேசிய சமாதானப்பேரவை அறிவித்துள்ளது. (01)

# எமது உறவுகளுக்கு என்ன நடந்தது? உயிரோடு உள்ளார்களா? இல்லையா?



**விடுதலைப் புலிகளும் - இராணுவத்தினரும் கைகுலுக்கிக் கொண்டிருக்கும் இன்றைய சமாதான காலப்பகுதியில், விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டு - சிறைகளில் அடைக்கப்பட்டும், காணாமற்போயும் உள்ளவர்களின் நிலையோ கவலைதோய்ந்த வரலாறாகவே உள்ளது.**

**இவர்களது பெற்றோர்களும், உறவினர்களும் காலத்திற்குக்காலம், ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டும், பலரைத் தொடர்புகொண்டும் பதில் ஏதும் கிடைக்கவில்லை.**

**நேற்றுமுன்தினம் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் இருந்து பெறப்பட்ட கண்ணீர்க் கருத்துக்கள் சில இங்கே பிரசுரமாகின்றன.**

### க.பொன்னம்மா
### ஐயனார் கோயிலடி
### கொடிகாமம்.



எனது மகன் சிறிகரன், 1996 ஆம் ஆண்டு ஜ"லை மாதம் 30 ஆம் திகதி எமது உறவினரான கணேசமூர்த்தி என்பவருடன், உழவு இயந்திரம் ஒன்றில் தேங்காய் வியாபாரம் செய்வதற்காக யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார். அப்போது செம்மணிப்பகுதியில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்டார். உடனே கணேசமூர்த்தி உழவு இயந்திரத்தை அந்த இடத்திலேயே நிறுத்திவிட்டு, சிங்களம் தெரிந்த வேறோருவரைக் கூட்டிவந்து, இராணுவத்திடம் விசாரிக்க வந்தபோது - எனது மகனின் கை, கால், கண்களைக் கட்டிப் போட்டு, பாலமொன்றின் அடியில விட்டிருந்தார்கள். இதனைக் கண்ட கணேசமூர்த்தி - இராணுவத்தினரிடம் விசாரித்தபோது, தாம் முறைப்பாடு எடுத்துவிட்டு விடுவதாகச் சொன்னார்கள்.

பொழுதுபட்டுவிட்டதால், உறவினர் எமது வீட்டிற்குத் திரும்பிவந்து, எனது மகனை இராணுவத்தினர் கைதுசெய்ததாகவும், பின்னர் விடுவதாகக் கூறியதாகவும் சொன்னார்.

அடுத்து கணேசமூர்த்தியுடன், நானும் வந்து செம்மணியிலுள்ள இராணுவத்தினரிடம் விசாரித்தபோது, எவது மகனை விடுதலை செய்துவிட்டதாகவும் அவர் கொழும்புத்துறையிலுள்ள மாமா வீட்டுக்குச் சென்றுள்ளதாகவும் கூறினார்கள்.

அதை நம்பிய நாம், கொழும்புத்துறைக்குச் சென்று விசாரித்தபோது, அங்கு எனது மகன் வரவில்லையென உறவினர்கள் தெரிவித்தார்கள். பின் மீண்டும் செம்மணிக்கு வந்து இராணுவத்தினரிடம் கேட்டபோது, அவர்கள் எனது மகனை விடுதலை செய்துவிட்டதாகவும் அவர் எங்குபோனார் என்பது எமக்குத் தெரியாது என்றும் சொன்னார்கள்.

பின் நாம் பல இடங்களிலும் இது தொடர்பாக அறிவித்தோம். எனக்கு எட்டுப் பிள்ளைகள். இவர்தான் மூத்த பிள்ளை. கணவருக்கும் கால் ஏலாது. ஊனமுற்றவர். எனது மூத்தபிள்ளைதான் எமது குடும்பத்தை காப்பாற்றி வந்தவர்.

இப்போது நாம் இருக்கச் சொந்த இடமின்றி அலைந்து திரிகின்றோம். வடமராட்சியில் இருந்துபோது, 10 பவுண் நகையையும் களவு கொடுத்தோம். தற்போது கொடிகாமத்தில் வேறோருவரின் காணியில் இருக்கின்றோம். அவர்கள் விரைவிலே எழும்பச் சொல்லி நிற்கிறார்கள்.

தற்போது, மழைநேரத்தில் எமது வீட்டு நிலம் முழுவதும் ஊறிவிட்டது. சாக்குப் போட்டு அதன்மேல்தான் படுக்கின்றோம். எமக்குச் சரியான கஷ்டம். எமக்கு அரசாங்கம் செய்கின்ற எந்தவிதமான உதவிகளும் இதுவரை கிடைக்கவில்லை.

எதுவுமே எமக்கு வேண்டாம். எனது பிள்ளைக்கு என்ன ஆனது என்பது தொடர்பான முடிவைப் பெற்றுத்தந்தால் மட்டும்போதும்.

### க.புஸ்பமலர்
### அல்லாரை வடக்கு,
### கொடிகாமம்



1996 ஆம் ஆண்டு ஆடி மாதம் 21 ஆம் திகதி நடைபெற்ற சுற்றிவளைப்பொன்றின்போது, படையினரால் கைது செய்யப்பட்ட எனது மகன் சசிகரனுக்கு, அதற்குப் பிறகு என்ன ஆனது என்பது இதுவரை தெரியவில்லை.

இராணுவத்தினர் அன்று சுற்றிவளைப்பு என்று சொல்லி - எனது பிள்ளைகள், பக்கத்து வீட்டுக்காரர் எல்லாரையும் கூட்டிக்கொண்டு கொடிகாமம் திருநாவுக்கரசு பள்ளிக்கூடத்துக்கு போனவை. அங்கு நடைபெற்ற விசாரணைகளின் பின், எல்லாரையும் விட்டுவிட்டு, ஆண்டு 9 படித்துக்கொண்டிருந்த பதினைந்து வயதுப் பிள்ளையாகிய எனது மகனை மட்டும் தடுத்துவைத்திருந்தார்கள்.

அவர் கறுத்த நிறமுடையவர். எனவே, அவர் காடுகளில் இருக்கிறவர் எனச் சந்தேகம் கொண்டே, படையினர் தடுத்துவைத்ததாக எனது மூத்த மகன் வந்துகூறினார்.

அதன்பின் நானும், எனது கணவரும் சென்று இராணுவத்தினரிடம் எனது மகன் பாடசாலை மாணவன் என பலவற்றை எடுத்துக்கூறினோம். அப்போது எனது கணவருக்கு துப்பாக்கிப்பிடியால் அடித்தார்கள்.

அறைக்குள் பூட்டிவைத்திருந்த எனது மகனையும் அடித்தார்கள். அவர் 'அம்மா அம்மா' என்று கத்தினார். அவருக்கு அடித்ததை நான் அறையின் ஜன்னலூடாகக் கண்டேன். கையெடுத்துக் கும்பிடக் கும்பிட அடித்தார்கள்.

பின் அங்கிருந்து அவரை வேறொரு முகாமிற்கு கொண்டு போனார்கள். நான் இராணுவத்தினரின் பின்னே கலைத்துக்கொண்டு ஓடினேன். மோட்டார் சைக்கிளில் சென்ற இராணுவத்தினர்- துப்பாக்கியை என்னை நோக்கி நீட்டி, சுடப்போவதாக எச்சரித்தார்கள்.

நான் 'எனது பிள்ளையைக் கொண்டு போறீர்கள், என்னைச் சுட்டுவிட்டுச் செல்லுங்கள்' எனக் கத்தினேன். அப்போது ஐந்து மணியுடனேயே ஊரடங்கு அமுலுக்கு வந்துவிடும். எனவே, என்னால் எதுவுமே செய்ய முடியவில்லை.

பிறகு கொடிகாமத்தில் எல்லா முகாம்களுக்கும் சென்று, எனது பிள்ளையைப் பற்றி விசாரித்தேன். படிக்கிற பிள்ளையை நாங்கள் வைத்திருக்கமாட்டோம். அவரை விட்டிட்டம் என்று சொன்னார்கள். எல்லா முகாம்களிலும் எனது மகன் இல்லையென கைவிரிக்கப்பட்டது.

நான் பலாலி இராணுவ முகாம் தொடக்கம் நாட்டிலுள்ள சிறைகள் எல்லாவற்றுக்கும் சென்று தேடிவிட்டேன். எனக்கு எனதுபிள்ளை இன்றுவரை கிடைக்கவேயில்லை....

### செ.கனகாம்பிகை
### அன்னையர் முன்னணித் தலைவி



எனது மகன் கோகுலராஜ். இவர் எனக்கு ஒரேயொரு ஆண்பிள்ளை. தச்சு வேலை பழகிக் கொண்டிருந்தார். அன்றும் இவர் வழமைபோல -(1996 ஆம் ஆண்டு 8 ஆம் மாதம் 10 ஆம் திகதி காலை) வேலைக்குச் செல்வதற்காக வீட்டிலிருந்து புறப்பட்டார்.

எமது வீடு இராணுவத்தினரின் 512 ஆவது படைத்தளம் அமைந்துள்ள சுபாஸ் ஹோட்டலுக்கு அருகிலேயே உள்ளது. எனது மகனை இராணுவத்தினர் கைதுசெய்த அன்றுமாலை, 5.00 மணிக்குக் கட்டி இழுத்துக்கொண்டு வந்தார்கள். அவருக்கு இராணுவ உடுப்பு, சப்பாத்து, தொப்பி என்பன போடப்பட்டிருந்தது. எனது மகனை என்னால் அடையாளம் காணமுடியவில்லை. இராணுவத்தினர் எனக்கு முன்னால்வைத்து, எனது பிள்ளையை அடித்தபோது, அவர் 'அம்மா... அம்மா...' என்று குழறினார். அப்போதுதான் எனது பிள்ளையை நான் அடையாளம் கண்டேன்.

எனக்கு நான்கு பெண்பிள்ளைகள். இவரை அடித்தபோது, இரண்டுபேர் மட்டும் தான் வீட்டில் இருந்தோம். நானும் எனது பெண்பிள்ளையும் - மகனை அடித்தபோது கத்தினோம். இதனால், இராணுவத்தினர் எம்மை வீட்டிற்குள் வைத்துப் பூட்டினார்கள்.

மகனை முன்னால் இருந்த ஆட்களில்லா வீட்டிற்குள் கொண்டுபோய் வைத்து அடித்தார்கள். அப்போது அவர் கத்திய குரல் எமக்குக் கேட்டது. நாம் இடம்பெயர்ந்து வந்திருந்த காலமாதலால், கணவருக்குத் தொழில் வாய்ப்புக்கள் எதுவும் கிடைக்கவில்லை.

இதனால், O/L படித்துவிட்டு வீட்டையிருந்த எனது மகன், குடும்பத்தைப் பார்ப்பதற்காகத்தான் வேலைக்குச் சென்றவர். அவர் சொன்னார் - 'அம்மா என்னைப் படிப்பிக்கிறது உங்களுக்குக் கஷ்டம். நான் உழைச்சு தங்கச்சிமாரைப் படிப்பிப்பன்' என்று.

அன்று காலையும் யாழ்ப்பாணம் இரண்டாம் குறுக்குத் தெருவில்தான் வேலை என்று சொல்லிவிட்டுச் சென்றார். பின்னேரம் ஐந்து மணிக்கு இராணுவம் - எனது மகனை கொண்டுவந்தது. 'அம்மா...' என்றொரு சத்தம் படலைக்குள் கேட்டது.

ஓடிப்போய்ப் பார்த்தால், எனது பிள்ளை என்னிடம் ஓடிவருவதற்காக இராணுவத்தினருடன் போராடிக்கொண்டிருந்தார். அப்போது இருபத்தைந்துக்கும் அதிகமான இராணுவத்தினர், எமது வீட்டுக்குள் நுழைந்து, எனக்கும் என்னோடு இருந்த பெண்பிள்ளைகளுக்கும், கணவருக்கும் அடித்தார்கள்.

இராணுவ அதிகாரியொருவர் வீட்டுக்குள் வந்து அலுமாரிகள், அறைகள் எல்லாவற்றையும் சோதனையிட்டார். எமது முன்வீட்டில் குண்டு வைச்சிருந்ததாகக் கூறித்தான், எனது பிள்ளையைக் கைது செய்திருந்தார்கள். அண்டைக்குக் கடைசியாய் எனது பிள்ளையைப் பார்த்ததுதான், அதன்பிறகு என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது.

இதனால், நாம் எமது பிள்ளை இறந்துவிட்டாரென எண்ணுவதா? உயிரோடு உள்ளாரென எண்ணுவதா? எனக் கவலையோடு உள்ளோம். எனது பிள்ளையின் நிலைகளை அறிய முடியாததால், ஒரு நன்மையான காரியங்களையும் செய்யமுடியாமல் உள்ளது.

எங்களின்ர பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என அறியவே நாம் ஆசைப்படுகிறோம். உயிரோடு இருக்கிற பிள்ளைக்காக நாம் அழுகின்றோமா? அல்லது எமது பிள்ளை உயிரோடு இல்லையா? எமது பிள்ளைகள் செத்துவிட்டார்கள் என்று அறிந்தால், நாம் சாகப்போவது இல்லை. அவர்களுக்கு என்ன ஆனது என்பதை அறியவே நாம் துடிக்கின்றோம்.

இன்று எந்த சந்தோஷமும் எமக்கு இல்லை. அரசியல்வாதிகள் - பதவிக்கு அடிபடுகிறார்கள். நாங்கள் பிள்ளைகளுக்காக அடிபடுகிறோம். இதுதான் இன்றையநிலை.

நான் கூறுகிறேன் - எம்மை ஏமாற்றி, தாங்கள் பிழைப்பதை நிறுத்தி, முடிந்தால் எமக்கு உதவிசெய்யுங்கள். இல்லாதுபோனால் எம்மைச் சுயாதீனமாக இயங்கவிடுங்கள் என அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

### கே.ஈஸ்வரி
### கைதடி

எனது கணவர் கோடீஸ்வரன் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு காணாமற்போயுள்ளார். எனக்கு 3 பிள்ளைகள். எனது கணவர் காணாமற் போனபோது, எனது மூத்த பிள்ளைக்கு ஏழு வயது.



எனது கணவர் மீன் வியாபாரம் செய்பவர். அன்று காலை 7 மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டார். அன்று நடந்த சுற்றிவளைப்பு ஒன்றில், நாவற்குழியிலிருந்து தனங்கிளப்பு வரை பொதுமக்கள் தடுத்து நிறுத்தப்பட்டிருந்தனர். இதற்குள் எனது கணவரும் அகப்பட்டுக்கொண்டார். அவரோடு அவரது மோட்டார் சைக்கிளும் இருந்தது.

நாம் சுற்றிவளைப்பில் சிவன்கோயிலுக்குக் கொண்டு செல்லப்பட்டோம். அந்தச் சுற்றிவளைப்பில் எனது கணவரின் தம்பியாரும் இராணுவத்தினரிடம் பிடிபட்டிருந்தார்.

நாவற்குழிப் பிள்ளையார் கோயிலடியில் சென்றுபார்த்தபோது எனது கணவரின் மோட்டார் சைக்கிள் மட்டும் நின்றிருந்தது. முன்னாலுள்ள வீட்டில் எனது கணவர் கண்கள், கைகள் கட்டப்பட்ட நிலையிலிருந்தார்.

நான் இராணுவத்தினரிடம் சென்றுகேட்டபோது விசாரித்துவிட்டு விடுவதாகச் சொன்னார்கள். ஆனால் இதுவரை அவரை விடவில்லை.

சில பெண்களுக்கு குழந்தைகள் வயிற்றிலிருக்கும்போதே, கணவர்மார் கைதுசெய்யப்பட்டனர். இன்று பிள்ளைகள் அப்பாவைக் கேட்கிறார்கள். நாளை வருவார் நாளை வருவார் என்று சொல்லியே காலம் போய்விட்டது.

### ச.சிவகுருநாதன்
### அம்மன் வீதி, திருநெல்வேலி



எனது மகன் ஆனந்தகிருஸ்ணன் காணாமற்போன விடயம் தொடர்பாக, மனித உரிமைகள் ஆணைக் குழுவிற்கு நான் அறிவித்துள்ளேன்.

1996 ஆம் ஆண்டு ஆடி மாதம் 15 ஆம் திகதி இவர் காணாமற்போயிருந்தார். இவர் சாவகச்சேரிக்கு வேலைக்குச் செல்கின்றவர். அதன்போதுதான், இராணுவம் இவரைக் கைதுசெய்தது. பின் ஆவணி மாதம் 3 ஆம் திகதி எனது மகனைக் கல்வியங்காடு சந்தியிலுள்ள இராணுவ முகாம் ஒன்றிலே கண்டு கதைத்தேன். அப்பொழுது இராணுவத்தினர் எனது மகனுக்கும் புலிகளுக்கும் எதுவித தொடர்புகளும் இல்லை. அவரை நாம் விடுதலை செய்வோம். பயப்படாமல் சென்று வாருங்கள் என என்னிடம் கூறினார்கள்.

இராணுவ முகாமிலே எனது மகனைக் கட்டிப்பிடித்து அழுதேன். எனது மகன் இன்றுவரை எங்கே உள்ளார் என்பது தெரியாமலுள்ளது. இது தொடர்பாக நான் ஜெனிவாவிலுள்ள செஞ்சிலுவைச்சங்கம் உட்பட, பல அமைப்புக்களுக்கும் அறிவித்துள்ளேன். பலாலி இராணுவத்தளத்திற்கும் சென்று, இது தொடர்பாக முறைப்பாடு தெரிவித்துள்ளேன்.

### சு.பொ.சற்குணம்
### காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கச்செயலாளர்.



எனது மகன் உயர்தரத்தில் கணிதத்துறையில் பயின்றவன். பொறியிற் பீடம் செல்லவிருந்த வருடம், படையினரால் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணத்தின் முன்னாள் அரச அதிபர் என்னிடம் கூறினார் - எனது மகன் உயிரோடிருப்பதாகவும், நான் தேவையில்லாமல் அலைந்து திரிவதாகவும், காணாமற்போனோரின் பெற்றோர்களை இணைத்து போராட்டம் நடத்துவதாகவும் என்மீது குற்றம் சுமத்தினார்.

ஆனால், எனது மகன் எங்கு இருக்கிறார். அவருக்கு என்ன நடந்தது என்று அவர் கூறவில்லை. ஆனாலும், இன்றுவரை எனது மகன் உயிரோடு இருக்கிறான் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

யாழ்ப்பாணத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களோ, அரசோ எமக்காக எதுவித நடவடிக்கைகளையும் உரிய முறையில் எடுக்கவில்லை. அடுத்துவரும் தேர்தல்களில் எமது பிரதிநிதிகளும் போட்டியிடவேண்டிய ஒரு சூழ்நிலை இதனால் உருவாகியுள்ளது.

நான் காணாமற்போனோர் விடயம் தொடர்பாக- பிரிகேடியர் ஜனக பெரேரா தொடக்கம், பல படையதிகாரிகளுக்குச் சொல்லியிருக்கிறேன், பொலிஸாரிடம் சொல்லியிருக்கிறேன், மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் சொல்லியிருக்கிறேன். ஆனால், இவர்கள்கூட எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

### நுவான் சந்திரசேகரா
### ம.உ.ஆணைக்குழு அதிகாரி



நான் இந்த விடயம் தொடர்பாக எனது தலைமையகத்துடன் பல தடவைகள் பேசியுள்ளேன். இதற்கென அமைக்கப்பட்ட விசேட ஆணைக்குழு - தனது விசாரணைகளை முடித்துள்ளது. இந்த விசாரணைகள் தொடர்பான அறிக்கைகள் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

மனித உரிமைகள் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட அறிக்கையிலே, பாதுகாப்புப் படையினரைப் பலமாகக் குற்றஞ்சாட்டியே அறிக்கை விடப்பட்டுள்ளது. இது பலமான தாக்கத்தை உருவாக்கும்.

சர்வதேசரீதியான மனித உரிமைகள் தொடர்பான நிறுவனம் - எம்மிடம் ஆவணங்களைக் கேட்டபோது, நாம் அவற்றை வழங்கியுள்ளோம். எம்மால் விசாரணைகளை மட்டுமே நடத்தமுடியும். நடவடிக்கைகள், தீர்வுகள் எதையுமே எடுக்கமுடியாது. அரசிற்கு அறிக்கைகளைச் சமர்ப்பிப்பது மட்டுமே எமது வேலை. அரசுதான் மேலதிக நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முன்னால் மறியல் செய்ய அவர்களுக்கு உரிமையுண்டு. அவர்களது பிள்ளைகள் காணாமற்போனமைக்காக, அவர்கள் போராட உரிமையுண்டு. ஆனால், எம்மால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கமுடியாதென்பது கவலையான விடயமாகும்.

நேர்காணல்:
**சங்கர், சர்வேஸ்**

## ஈராக் மீதான தாக்குதலுக்கு
# எதிர்ப்புத் தெரிவித்த நாடுகள் புனரமைப்பிற்கு உதவமுடியாது
## அமெரிக்கா அறிவிப்பு

ஈராக் மீது படையெடுப்பை மேற்கொண்டபோது அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த நாடுகள் ஈராக்கின் புனரமைப்பு வேலைகளுக்கு உதவுவதற்கு அனுமதிக்கப்போவதில்லை என, அமெரிக்கா அறிவித்துள்ளது.

எனினும் பிரான்ஸ், ஜேர்மனி, ஆகிய இருநாடுகளும் ஈராக் புனர்நிர்மாணப்பணிகளில் பங்குபற்ற அனுமதி அளிக்கப்படாலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட ஈராக்கினை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக, 20 மில்லியன் டொலர் செலவில் முதற்கட்டப் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஈராக் மீதான போர் நடைபெற்ற வேளையில் அமெரிக்காவிற்கெதிராக பிரசாரம் மேற்கொண்ட நாடுகளுக்கும், அமெரிக்காவிற்கு உதவ முன்வராத நாடுகளுக்கும் ஈராக்கின் புனரமைப்புப் பணிகளில் பங்குபற்ற வாய்ப்பளிக்கப்படாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தலை பென்டகன் நேற்று வெளியிட்டுள்ளது. இந்த அறிவிப்பு அமெரிக்க இணைப் பாதுகாப்பு செயலரின் அறிவுறுத்தலின் கீழ் விடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவின் பாதுகாப்பு கருதியே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அமெரிக்கா மேலும் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் இந்த அறிவிப்பிற்கு பல ஐரோப்பிய நாடுகள் தமது கண்டனத்தையும் அதிர்ச்சியையும் தெரிவித்துள்ளன.

# பலஸ்தீனத்திற்கு நிதி வழங்க ரோமில் ஆலோசனைக் கூட்டம்

பலஸ்தீனத்திற்கு வழங்குவதற்கான நன்கொடை தொடர்பாக தீர்மானங்களை மேற்கொள்வதற்கு உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள், ரோமில் கலந்தாலோசிப்பதற்கு திட்டமிட்டுள்ளார்கள்.




பலஸ்தீனம் 1.2 பில்லியன் டொலர்கள் உதவி வழங்கும் நாடுகளில் இருந்து எதிர்பார்ப்பதாக தெரிவித்துள்ளது. இஸ்ரேலுடன் போர் ஆரம்பித்த பின் பலஸ்தீனர்களின் வாழ்க்கைத்தரம், சுகாதாரம் ஆகியன மிகுந்த அளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படடுள்ளது. இவற்றை நிவர்த்தி செய்வதற்கு புதிய திட்டங்களை செயற்படுத்துவதற்கும் இந்த நிதி தேவைப்படுவதாக பலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

எதிர்வரும் புதன்கிழமை நடத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்ட இந்தக் கூட்டத்தில் 14 உதவி வழங்கும் நாடுகள், உலக வங்கி, இஸ்ரேல், பலஸ்தீனம் ஆகியன பங்குகொள்வதாக உள்ளன.

பலஸ்தீன வெளிநாட்டமைச்சர் 'நபில் சாத்' தனது நாட்டின் சார்பாக தலைமை தாங்கவுள்ளார்.

இதனிடையே இஸ்ரேலின் வெளிநாட்மைச்சர் 'சில்வன் சலோன்' தொலைக்காட்சிக்கு தெரிவித்த செய்தியில், சட்டத்திற்கு மாறுபாடாக நிர்மாணிக்கப்பட்ட யூதக் குடியிருப்புகள் அகற்றப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

மேலும், செஞ்சிலுவைச் சங்கம் மேற்குக்கரைப்பகுதியில் தனது இரு அவசரகால உதவித் திட்டங்களை நிறுத்த உள்ளதாக தெரிவித்தார்கள். இந்தத் திட்டத்தின் மூலம் 50 000 பலஸ்தீனர்கள் உதவிபெற்று வந்துள்ளார்கள்.

# தாய்வான் அரசை மிரட்டும் வகையில் சீனா ஏவுகணையை நிறுத்தியுள்ளது

தாய்வானை நோக்கி அதன் எல்லையில் நூற்றிற்கும் மேற்பட்ட ஏவுகணைகளை சீனா நிறுத்தியுள்ளது.



மேலும் எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெற ஏற்பாடாகியுள்ள மக்கள் கருத்துக்கான வாக்கெடுப்பில் - ஏவுகணைகளை அகற்றுமாறு கேட்பதற்காக மக்களின் ஆணையை பெறுவதே நோக்கம் என ஜனாதிபதி தெரிவித்தார்.

இதனிடையே சுதந்திரமான நாடாக தன்னைத்தாய்வான் பிரகடனப்படுத்துவதற்கு இக்கணிப்பு ஒரு முன் ஏற்பாடு என அமெரிக்கா கருத்துத் தெரிவித்துள்ளது.

சீனாவின் பிரதம மந்திரி வெனஜிலாபோவை சந்தித்த பின் கருத்துத் தெரிவித்த அமெரிக்க அதிபர் புஷ் தாய்வானின் ஒரு தலைப்பட்சமான முடிவு 'ஒரு சீனா' என்ற அதன் கருத்துக்கு அச்சுறுத்தலாக அமையும் என்பதைத் தெரிவித்துள்ளார்.



இதனால் தாய்வான் மக்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என அறிந்துகொள்வதற்கு, மக்களின் பாதுகாப்பிற்கான கருத்துக்கணிப்பொன்றை மேற்கொள்வதற்கு, தாய்வான் ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார்.

போர் ஆக்கிரமிப்பொன்றை தவிர்த்துக் கொள்வதற்காகவே, இந்தக கருத்துக் கணிப்பென ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

## உலக நோக்கு



ஆப்கான் படையினர் கனரக வாகனங்கள் சகிதம் ஏவுகணைகளை வேறு இடத்திற்கு நேற்று முன்தினம் கொண்டு செல்வதனைக் காணலாம்.

# மேலும் மனிதரை உண்ண ஜேர்மன் வாசி விருப்பம்!

ஜேர்மனைச் சேர்ந்த மனித மாமிசத்தை உட்கொண்ட அர்மின் மெய்வெஸ் மேலும் மனிதர்களை கொலைசெய்து உண்பதற்கு விரும்புவதாக நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.





2001 ஆம் ஆண்டு மார்ச் மாதம் கணனி வலையூடாக அறிமுகம் ஏற்படுத்திக்கொண்ட 'பேர்ன்ட் யுஏகனை' கொலை செய்து உண்டதாக இவருக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்பட்டிருந்தது. இந்தக் கொலையை எவ்வாறு செய்தார் என்பதற்கான வீடியோப் பிரதி நீதிமன்றத்தில் 10 நிமிடங்கள்வரை காண்பிக்கப்பட்டது. இந்த வீடியோ காட்சியில் கொல்லப்பட்டவர் தன்னைக் கொல்லுமாறு கேட்டிருந்ததால் சமையல் அறையில் பாவிக்கும் கத்தியினால் - மயக்கநிலை ஏற்படக் கூடிய மருந்தை கொடுத்து மயக்க நிலையில் இருக்கும்போது மென்மையான பாகங்களை முதலில் உண்டதாக இவர் தெரிவித்ததுடன், மேலும் மிகுதிப் பாகங்களை குளிர்சாதனப் பெட்டியொன்றில் வைத்திருந்ததாகவும் தெரிவித்தார்.

## தீவிரவாதிகளுடன் தொடர்புடைய
# பாகிஸ்தான் கைதுசெய்த ஆறுபேரை இந்தோனேஷியாவிடம் கையளித்தது



ஜெமாஇஸ்லாமியா எனப்படும் தீவிரவாத குழுவில் அங்கம் வகித்துள்ள 6 இந்தோனேஷியர்களை பாகிஸ்தான் இந்தோனேஷியாவிடம் கையளிததுள்ளது. அந்த அமைப்பின் முக்கியமானவரும் அண்மையில் கைதுசெய்யப்பட்ட கம்பாலியின் சகோதரரும் கையளிக்கப்பட்டவர்களில் அடங்கியுள்ளார்.

பாகிஸ்தானில் மதக்கல்வி கற்பிக்கும் பாடசாலையொன்றில் நடத்தப்பட்ட முற்றுகையொன்றின் போது, இவர்கள் கைது செய்யப்பட்டார்கள். இவர்கள் மீது பாகிஸ்தான் எதுவித குற்றங்களையும் தாக்கல் செய்யவில்லை.

ஆனால்,இந்தோனேஷிய அரசு இவர்கள் மீது விசாரணை நடத்தவுள்ளது. பாகிஸ்தான் தலைநகர் கராச்சியில் உள்ள மதப் பாடசாலைகளில் வெளிநாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் மதக்கல்வி கற்றுவருகின்றனர்.

பாகிஸ்தானில் கல்வி கற்பதற்கு வேண்டிய பத்திரங்களை தமது சொந்தநாடுகளில் இருந்து பெற்றிருக்கவில்லை. இதனால் பலர் பலவந்தமாக திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

# ஈராக்கிற்கு 1000 படையினரை அனுப்ப ஜப்பான் அரசு முடிவெடுத்துள்ளது!

ஈராக்கிற்கு ஆயிரம் படையினரை அனுப்புவதற்கு ஜப்பான் அரசாங்கம் அங்கீகாரம் அளித்துள்ளது. இந்தப் படையினர் ஈராக்கில் போர் தவிர்ந்த மனிதநேயப்பணிகளில் ஈடுபடவுள்ளனர்.

அண்மையில் இரு ஜப்பானிய உயர் அதிகாரிகளின் மரணத்தின் பின் ஜப்பானிய மக்களிடையே படையினரை ஈராக்கிற்கு அனுப்புவதற்கு எதிர்ப்புகள் உருவாகியுள்ளன. ஈராக்கின் நிலை மோசமாக இருப்பதால் அங்கு ஜபபானிய படையினருக்கு பாதுகாப்பு இல்லை எனவும் தெரிவித்தனர்.

1991 ஆம் ஆண்டு வளைகுடாப் போரின் பின் ஜப்பானியப் படை எந்த நாட்டிற்கும் அனுப்பப்படாமல் பணம் மாத்திரமே வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

ஈராக்கில் ஜனநாயகம் ஒன்றை உருவாக்குவதற்கு அமெரிக்கா பல தியாகங்களைச் செய்துள்ளது. அமெரிக்காவின் நட்பு நாடாக ஜப்பான் இருப்பதால் ஈராக்கில் பணி புரியவேண்டியது அவசியமெனக் கருதப்படுகிறது.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட திட்டத்தின் பிரகாரம் ஈராக்கின் தென்கிழக்கு பகுதியில் நீர் விநியோகம், மருத்துவம் மனித நேயப் பணிகளான பாடசாலை அமைத்துக்கொடுத்தல் ஆகிய பணிகளில் ஜப்பானியப் படையினர் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# அணுவாயுதத் திட்டங்களை நிறுத்துவதுடன் உபகரணங்களையும் அகற்றுதல் வேண்டும்!
## வடகொரியாவிடம் புஷ் வலியுறுத்து

வடகொரியா தனது அணு ஆயுதம் தொடர்பான திட்டங்களை நிறுத்துவதோடு மாத்திரமன்றி, அந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்படும் இடங்களில் இருந்து அது தொடர்பான உபகரணங்களும் அகற்றப்பட வேண்டும் எனவும், அண்மையில் சீனப்பிரதமரின் வெள்ளை மாளிகை விஜயத்தின் போது ஒழுங்கு செய்யப்பட்ட உரையில் அமெரிக்க அதிபர் புஷ் குறிப்பிட்டார். அமெரிக்காவிற்கும் வடகொரியாவிற்கும் இடையே அணுஅமைப்பு தொடர்பான தடைப்பட்டுள்ள பேச்சுவார்த்தைகளை தொடர்வதற்கு சனா முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. ஆனால், கொரிய மாநிலம் அணு ஆயுதங்கள் இல்லாத பிரதேசமாக மாற்றப்படுதல் அவசியம் என அமெரிக்க அதிபர் வலியுறுத்தி வருகிறார். இதனிடையே டிசம்பர் 17 மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை சீனாவின் அதிகாரிகள் வாஷிங்டனுக்கும், வடகொரியாவிற்கும் இடையே செய்து வருகின்றனர்

இதனிடையே வடகொரியாவின் வெளிநாட்டமைச்சர் குறிப்பிடும் போது அமெரிக்காவின் கருத்துக்கள் தமது நாட்டை முற்றாகவே அணு சக்தி தொடர்பான செயல்பாடுகளை நிறுத்துவதற்கு முயற்சிப்பதாக தெரிவித்துள்ளார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## நாற்சந்தி

"முந்தநாள் பின்நேரம் யாழ். பஸ்நிலையம் பட்ட அல்லோலகல்லோலம், அந்தக் காலத்தை நினைவுக்குக் கொண்டுவந்தது..."

"அந்தக் காலம் எண்டால்...?"

"அதுதான் 82 இலிருந்து 90 வரையான காலப்பகுதிதான்... அப்ப பஸ் ஸ்ரான்டிலை ஒரு குண்டுவெடிக்கும் அல்லது வெடிச்சத்தம் கேட்கும்... நின்ட நின்ட இடத்திலயிருந்து சனம் ஓடத்தொடங்கும்... எல்லா இடமும் கொஞ்ச நேரத்தில அமைதியா அடங்கிப்போகும்... ஆமிக்காரர் மட்டும் ஓடித்திரிவினம்"

"ஆனால், ஒண்டைக் கவனிச்சியே மணியம்... இப்ப முழுச்சனமும் ஓடி ஒளியிறேல்லை பாத்தியே... கொஞ்சச்சனம் துணிச்சலா நிக்குது... அநியாயத்தைத் தட்டிக்கேட்கத் துணியுது... நெஞ்சை நிமிர்த்தி நியாயங் கேட்குது... அது பெரியவிசயமெல்லோ..."

"சரியாய்ச் சொன்னாய் கனகு... முந்தநாள் சுட்டுப்போட்டு ஜீப்பிலை ஏறி ஓடித்தப்ப முயன்ற ஆமிக்காரனை சனம் அவ்வளவு சுலபமாய் விடேல்லை பாத்தியே..."

"துப்பாக்கிச்சூடு, கண்ணீர்ப்புகை, தடியடியெல்லாம் எங்கட சனத்துக்குப் பழகிப்போச்சு... அதுசரி சுட்டவர் சொன்ன கதையைக் கேட்டியே... தற்பாதுகாப்புக்காக தன்ரை துப்பாக்கியை தயார் நிலைக்குக் கொண்டுவந்தபோது அது தவறுதலாக வெடிச்சிட்டுதாம்..."

"ஓமோம் முந்தி ராஜீவை அணிவகுப்பின்போது அடிச்சுக்கொல்ல முயன்ற கடற்படைச் சிப்பாய்க்கும், இப்பிடித்தான் ஏதோ சூரிய அதிர்ச்சித் தாக்கம் ஏற்பட்டதாலதான் அப்பிடிச் செய்ததாக ஜே. ஆர். அறிக்கை விட்டவரெல்லே...."

"எல்லாச் சனமும் ஏமாளிகள்... எல்லோருக்கும் காதிலை பூச்சுத்தி விடலாம் என்டெல்லோ நினைக்கினம் அந்தக் காலம் மலையேறீட்டிது"

"பொய் சொன்னாலும் பொருத்தமாய்ச் சொல்லவேண்டும்... பேய்க் காட்டினால் ஆரும் பேயனாப் பாத்தெல்லே பேய்க்காட்டவேண்டும்..."

"சரியாய்ச் சொன்னாய் கனகு... அதுசரி உதென்ன இண்டைய பேப்பரே...?"

"இல்லை...இல்லை... இது முந்தநாள் அந்தப் பெடியன் வித்த ஈழநாதம் பேப்பர்... மணியம்"

-தெருவாசி

## பிரபாகரன், பொட்டம்மான் ஆகியோரை

# இந்திய தூதரகத்தில் சரணடையுமாறு சுப்பிரமணியம் சுவாமி ஆலோசனை!

(சென்னை)

விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனும் அந்தஅமைப்பின் புலனாய்வுப்பிரிவின் தலைவர் பொட்டு அம்மானும் கொழும்பிலுள்ள இந்தியத்தூதரகத்தில் சரணடைந்தால் இந்தியாவுக்கு அழைத்து வந்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சட்ட நடவடிக்கை எடுக்க வழி செயயலாம் என ஆலோசனை வழங்கியுள்ளார் இந்திய முன்னாள் சட்டத்துறை அமைச்சரும் ஜனதாக் கட்சியின் தலைவருமான சுப்பிரமணியம் சுவாமி.

பாங்கொங்கிலிருந்து வெளிவரும் "ஏசியன் ரிபியூன்" என்ற பத்திரிகைக்கு எழுதிய கடிதத்திலேயே சுப்பிரமணியம் சுவாமி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது - புதிய வழி ஒன்று புலிகளுக்கு தேவையாக இருந்தால், அதற்கான ஒரேயொரு மாற்று வழியே உண்டு. அது பிரபாகரனும், பொட்டு அம்மானும் கொழும்பிலுள்ள இந்தியத்தூதரகத்தில் சரணடைந்து, இந்தியாவில் அவர்களுக்கெதிராக உள்ள வழக்குகளுக்கு முகம் கொடுப்பதுதான்.

அத்துடன் இவ்வாறு அவர்கள் செய்தால் அது, அவர்களுக்கான முதற்படியெனவும், அதன் பின்னர் அவர்கள் இருவருக்கும் ராஜீவ் காந்தி கொலை தொடர்பில் தண்டனை வழங்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், விடுதலைப்புலிகள் இந்தியக் கடற்பகுதியைப் பாவிப்பதனை தடுக்கவேண்டுமென பிரதமர் வாஜ்பாய் தமிழ்நாடு முதலமைச்சரான ஜெயலலிதாவிற்கு வற்புறுத்த வேண்டும்.

விடுதலைப்புலிகளின் இவ்வாறான நடவடிக்கைகள் காரணமாகவே 1991 ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் ஆட்சியிலிருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தை மத்தியில் ஆட்சியிலிருத்த பிரதமர் சந்திரசேகரர் தலைமையிலான அரசு கலைத்தது.

அத்துடன் விடுதலைப் புலிகள் இந்தியாவைப் பின்தளமாகப் பாவிப்பதை அனுமதிக்காமல் இருப்பதற்கு, மத்தியிலுள்ள அரசாங்கம் எப்பொழுதும் விழிப்பாக இருக்க வேண்டும்.

பெரும்பான்மையான சிங்களவர்கள் இலங்கையை ஆட்சி செய்வதை நாம் அனுமதிக்கமுடியாது. ஏனெனில் இவர்கள் ஒருபோதும் இந்தியாவிடம் சரணடையமாட்டார்கள். எனவே என்றோ ஒருநாள் இலங்கையைக் கைப்பற்றி அதனை இலங்கை மக்களிடம் ஆள்வதற்குக் கையளிக்க வேண்டும்.

விடுதலைப்புலிகள் தான் தமிழ் மக்களுடைய ஏகப்பிரதிநிதிகள் என்பதனையும் இந்தியா ஏற்றுக் கொள்ளவில்லை எனவும் சுவாமி மேலும் தெரிவித்தார்.

முன்னர் பிரபாகரன், பொட்டு அம்மான் ஆகியோரைக் கைதுசெய்ய, இந்தியப் படைகளை இலங்கைக்கு அனுப்பவேண்டுமென சுப்பிரமணிய சுவாமி கூறியது குறிப்பிடத்தக்கது.

### அரசியல்...

இதனடிப்படையிலேயே பிரதமர் இந்த விபரங்களை நேற்று ஜனாதிபதியிடம் சமர்ப்பித்திருந்தார்.

எனினும் பேச்சின் முடிவில் இருவரும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை யார் தலைமையில் மேற்கொள்வது, மற்றும் பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்பது போன்ற விடயம் குறித்து தீர்மானங்கள் எதுவும் எடுக்கப்படவில்லை.

நேற்றைய சந்திப்பின் முடிவில் அடுத்த சந்திப்பிற்குரிய திகதி பற்றியும் பேசப்படவில்லை என ஜனாதிபதியின் ஊடகப்பணிப்பாளர் ஜனதாஸ பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இவற்றின் அடிப்படையில் நேற்றைய சந்திப்பும் எந்த ஒரு முடிவுமின்றி முடிவடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### இராணுவச்...

இராணுவப் பேச்சாளர் இந்தச் சம்பவம் குறித்துத் தெரிவிக்கையில்- பத்திரிகை விநியோகத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த ஒருவரை இராணுவத்தினர் விசாரிக்க முற்பட்டபோது அவர் இராணுவத்தின் மீது கைக்குண்டொன்றை வீசமுற்பட்டதாகவும், அவ்வேளை இராணுவத்தினர் அவரை சுடமுற்பட்டதாகவும் தெரிவித்தார்.

## இராணுவ பௌசர் மோதியதில் ஓட்டோ வயலுக்குள் வீழ்ந்தது

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் - சங்குவேலி வீதியில், ஓட்டோ ஒன்றின் மீது இராணுவ பௌசர் மோதியதில் ஓட்டோ வயல் பகுதிக்குள் பயணிகளுடன் தூக்கி வீசப்பட்டது.

நேற்றுமாலை 5.30 மணியளவில் நடந்த இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது-

பயணிகளுடன் சண்டிலிப்பாயிலிருந்து உடுவில் நோக்கி சங்குவேலி வயல் பாதையினூடாக சென்ற ஓட்டோ எரிபொருள் தீர்ந்ததால் வீதியின் அருகில் நின்றது. அந்த வீதியால் வந்த படையினரின் தண்ணீர் பௌசர் - ஓட்டோ மீது மோதியதில், ஓட்டோ சாரதி உட்பட அதற்குள் இருந்த பயணிகள் ஓட்டோவுடன் சேர்த்து வயற்பகுதிக்குள் தூக்கி வீசப்பட்டனர் இந்தச் சம்பவத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

சம்பவ இடத்திற்கு வந்த மானிப்பாய் பொலிஸார் - ஓட்டோவையும், இராணுவத்தினரின் பௌசரையும் மேலதிக விசாரணையின் பொருட்டு பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர்.

(42)

## கிண்ணியா சம்பவத்தைக் கண்டித்து

## கிழக்கு மாகாணத்தில் ஹர்த்தாலுக்கு அழைப்பு

திருகோணமலை - கிண்ணியாப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற சம்பவங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கிழக்கு மாகாணத்தில் நாளை ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

"முஸ்லிம் இளைஞர் எழுச்சிப் பேரவை மன்றம் - வட கிழக்கு மாகாணம்" எனும் அமைப்பே இந்தக் ஹர்த்தாலுக்கான அழைப்பை விடுத்துள்ளது.

நாளை கிழக்கில் திருமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் உள்ள அரச, அரச சார்பற்ற நிறுவனங்களை இயங்காமல் செய்வதுடன் பஸ் சேவையை நிறுத்துமாறும் இந்தத் துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு வர்த்தக நிறுவனங்கள் தமது வர்த்தக செயற்பாடுகளை நிறுத்துமாறும் இந்த அமைப்பினால் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (07)

## கைதுசெய்த மீனவர்களை விடுவிக்ககோரி இராமேஸ்வர மீனவர்கள் பகிஷ்கரிப்பு

(சென்னை)

இலங்கைக் கடற்பரப்பில் கைதான 16 இந்திய மீனவர்களை விடுவிக்கக்கோரி, நேற்று இராமேஸ்வர மீனவர்கள் கடலுக்குச் செல்லாது போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளார்கள்.

தொடர்ந்தும் இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையாலும், மீனவர்களாலும் கைதுசெய்யப்படுவது கவலைக்குரியதான விடயம். அதில் இந்திய அரசு தலையிட்டு சரியான தீர்வைப் பெற்றுத்தரவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே இராமேஸ்வர மீனவர்கள் இந்தப் போராட்டத்தை நடத்தியுள்ளார்கள்.

இவ்விடயம் குறித்து தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, பிரதமர் வாஜ்பாய்க்கு கடிதமெழுதியிருந்தார். எனினும், அந்தக் கடிதம் இந்திய இலங்கைத் தமிழ் மக்கள் மத்தியில் பிளவை ஏற்படுத்தக் கூடியதாக அமைந்திருப்பதாகவும், இவ் விடயத்தில் விடுதலைப்புலிகள் தலையிட்டதாலேயே இந்திய மீனவர்கள் பலர் விடுவிக்கப்படுவதாகவும் வை. கோ தெரிவித்தார்.

## திலங்க சுமதிபாலவை விடுவித்த நீதிவான் பதவி நீக்கப்பட்டார்!

இலங்கைக்கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் திலங்க சுமதிபாலவை விடுதலை செய்த நீதிவான் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். கொழும்பு மாவட்ட மேலதிக நீதிவான் ஆனந்தசமர ஆராய்ச்சி என்பவரே பதவியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டவராவார்.

இவருக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருப்பதாக, நீதிச்சேவை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சுமதிபாலவின் விடுதலை நீதிச் செயற்பாடுகளுக்கு முரணாக உள்ளதாக நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் சந்திரா ஜெயத்திலக தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை, கொழும்பு மாவட்ட பிரதம நீதிபதியும் இந்த விடயம் குறித்து ஆச்சரியம் தெரிவித்திருக்கிறார். இந்த வழக்கு விசாரணை குறித்து மீண்டும் பரிசீலினை செய்யப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் யாழ். கல்விவலயம்முன் மறியல்

உடற்கல்வி டிப்ளோமா பட்டதாரிகள் சங்கத்தினர் - நேற்று யாழ்.வலயக் கல்வித் திணைக்களத்துக்கு முன்னால் மறியற் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். தமக்கு வேலைவாய்ப்புகளை வழங்கக்கோரியே இவர்கள் மறியற் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காலை 8 மணியளவில் கல்வித் திணைக்களத்தின் வாயிலுக்கு முன்னால் கூடிய இவர்கள், சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு மறியற் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

போராட்டத்தின் முடிவில் ஜனாதிபதி, பிரதமர், கல்வி அமைச்சர் ஆகியோருக்கு முகவரியிடப்பட்ட மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

(111)

### படையினர்...

அதிகாரிகள் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

படையினருக்கும், புலிகளுக்குமிடையிலான வழமையான சந்திப்பே இது எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (07)

### காணாமல்...

இதேவேளை காணமற்போனோர் தொடர்பாக விசாரிப்பதற்காக உருவாக்கப்பட்ட விசேட ஆணைக்குழுவில் இருந்து இவர்களுக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இக்கடிதங்களில் காணாமற்போனவர்கள் தொடர்பாக தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர்களது நிலை தொடர்பாக கண்டறிய முடியவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டப் போராட்டத்தில் அன்னையர் முன்னணியினரும் கலந்துகொண்டனர்.

### ஜனாதிபதி....

ஆராயவுள்ளனர்.

மனோ தித்தவெலவும், மலிக் சமரவிக்கிரமவும் தமது குழுவினருடன் இணைந்தே இந்த ஆராய்வை மேற்கொள்ளவுள்ளார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 11.12.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.